அன்பர் குமாரசாமிக்கு
வணக்கத்துடன்
[illegible] 7.1.81

இன்று
இசைக் கல்லூரிகளில் வழங்கும்
வட சொல்களுக்கு உரிய

இசைத்துறைத் தமிழ்ச் சொல்கள்

★

ஐந்தாம்
உலகத் தமிழ் மாநாட்டின்போது
தமிழகப் புலவர் குழுவின் சார்பில்
முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. வி. ஆதரவில்
வெளியிடப்பட்டது

7 - 1 - 1981

★

ஆக்கியோன் :
வீ. ப. கா. சுந்தரம்
தமிழ்ப் பேராசிரியன்
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
மதுரை-10

விலை. 3-50.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இன்று இசைக் கல்லூரிகளில் வழங்கும் இசைத் துறை வட சொல்களுக்கு உரிய தமிழ்ச் சொல்கள்

1. சென்ற பல நூற்றாண்டுகளிலும் வட சொல்கள் :

பத்தாம் நூற்றாண்டுக்குமேல் தமிழகத்தில் இசைத் துறையில் வடசொல்கள் மிகவும் வழக்குக்கு வந்து வளர்ந்தோங்கிப் படிப்படியாய்த் தமிழிசைத்துறைச் சொல்களை அழியச் செய்துவிட்டன. இன்று தமிழ்நாட்டின் இசைக் கல்லூரிகளில் நூற்றுக்கு 95 விழுக்காடு வடமொழிச் சொல்களே. மேலும் இசைக் கல்லூரிகளில் தமிழிசைக்கு மூலநூல்கள் வடமொழியில் எழுதப்பட்ட நூல்கள் என்று பெரும்பாலும் சொல்லி வருகின்றார்கள். வடமொழிச் செய்யுட்களையே மேற்கோள்கள் காட்டிவருகின்றார்கள். வடமொழிச் சொல்கள் இல்லை எனில் தமிழிசை இலக்கணத்தை விளக்கமுடியாது என்னும் கருத்தும் உளது. தென்னக இசைக்கல்லூரிகளில் பாடமாக வைத்துள்ள இசையியல் நூல்களில் எல்லாம் நூற்றுக் கணக்கான வடமொழிச் சொல்கள் வழங்கிவருகின்றன.

2. பிறதுறை நூல்களில் புதுமலர்ச்சி :

தமிழக அரசு—சென்ற ஆண்டுகளில் பெரிதும் முயன்று கலைச் சொல் அகராதிகள் வெளியிட்டுள்ளது. அறிவியல், நிலவியல், மெய்யியல், பயரியல், உயிரியல், ஆட்சியியல் முதலிய இயல்களுக்குத் தமிழ்த் துறைச் சொல் அகராதி வெளியிட்டுள்ளது தமிழக அரசு. ஆனால், இசையியலுக்குத் தமிழ்த் துறைச்சொல் அகராதி வெளியிடவில்லை. வெளியிடும் திட்டமும் வகுத்துத் தெரியப்படுத்தவில்லை.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழக அரசு—தமிழ் இசைத்துறைக்குச் செய்து வரும் ஆக்கப் பணிகளுள், இசைத்துறைச் சொல் அகராதித் திட்டமும் சேருதல் நலமாகும்.

3. தமிழிசை இயக்கம் செய்துள்ள தொண்டு :

அண்ணுமலையில் தோன்றி, நாளொரு மேனியாய் வளர்ந்து, வளம் நல்கி வரும் தமிழிசை இயக்கம் தமிழகத்திற்கு விழிப்புணர்ச்சி ஊட்டியது. அரும் தொண்டு ஆற்றியுள்ளது. தமிழிசை இயக்கம் ஒரு பறவை எனலாம். அதற்கு இரு இறக்கைகள். ஓர் இறக்கை கீர்த்தனை யாத்தலும் இசையமைத்தலும். மற்றோர் இறக்கை—இசைஇலக்கணம், இசையியல். இசையிலக்கணத்தை இன்று வரை உரிய தமிழ்த்துறைச் சொல்களைக் கொண்டு எழுதி வெளியிட வில்லை.

இசையியல் பகுப்பு : தமிழக இசையியலைக் கீழ்க்கண்ட வாறு பகுத்து அமைக்கலாம் :

1. கோவை இயல் (சுவர சாஸ்திரம்)
2. ஒத்து இயல் (ஸ்ருதி சாஸ்திரம்)
3. பாலை இயல் (இராகம் உண்டாக்கும் முறை)
4. பண் இயல் (இராக சாஸ்திரம்)
5. பண் பகுப்பு வகையியல் (மேளகர்த்தா ஜன்ய ராகங்கள்)
6. ஆளத்தி நெறிமுறைகள் (இராகம் பாடும் இலட்சணம்)
7. தானம் பல்லவி பாடும் நெறிமுறைகள்
8. தாள வியல் (இது பல பகுப்புடையது)

4. தமிழிசை வரலாறு :

தமிழிசையியல் வரலாறு, தமிழிசைப் புலவர்கள் வரலாறு, முதலிய நூல்கள் நெறிமுறையாக வெளிவர

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வில்லை. ஆக்ஃச்போர்டுப் பல்கலைக் கழகம்—வெளியிட்டுள்ள இசைக் கலைக் களஞ்சியம் போன்று, (The Oxford Companion to Music - First edition 1938; seventh edition 1947) ஒரு இசைக் கலைக் களஞ்சியம் வெளியிடுதல் வேண்டும். இதனை அரசு வெளியிடாமல் போகுமோ என்ற கவலை நமக்கு வேண்டாம். இறையருள் கூட்ட இசைக் கலைக் களஞ்சியம் மலரும் ஒரு நாளில். நம் நாட்டுப் பெருமைகளுள் பண் அமைப்பும் தாளக் கொட்டு முழக்கு அமைப்புக்களும் தனிப் பெரும் சிறப்புடையன; உலகு நாடுகட்கு நாம் கற்பிக்கத் தக்கன.

5. தமிழிசைக்கு மூலக்குறிப்புடைய நூல்கள்:

உயர்தனிச் செவ்விசை (classical music) பற்றிய குறிப்புகள் ஆயிரக்கணக்கில் பழந்தமிழ் நூல்களில் உள்ளன. அவற்றை ஆராய்ந்து தொகுத்தும் வகுத்தும் விளக்கியும் நூல்கள் எழுதுதல்வேண்டும். பழந்தமிழ்ச் செவ்விசை—தொல்காப்பியத்தில் கருவாகவும், பத்துப்பாட்டில் பத்துமாதம் வளர்ந்து பிறந்த குழந்தையாகவும், சிலப்பதிகாரத்தில் சீரிய குமரிப் பெண்ணாகவும், சிலம்பின் செப்பரிய இரு பெரும் உரைகளிலே மண முடித்துச் சேய் ஈன்ற தாயாகவும் காட்சி அளிக்கின்றாள்.

இசை ஆராய்ச்சிக் கடலில் பயிற்சி பெற்றவர்கள் முறையாக, நெறியாக நடுநிலை பூண்டு மூழ்கினால், கொற்கை முத்திலும் நற்பெரும் இசைமுத்துகள் இடைக்கப் பெறலாம். தமிழைப் புறக்கணிக்காமல், இகழ்ந்து தள்ளாமல் இரக்கப்பட்டுக் கூடி ஆராயும் உள்ளம் வேண்டும்.

இனி இக்கட்டுரையில்—கோவையியல் பற்றிய இசைத் துறைத் தமிழ்ச் சொல்கள் மட்டுமே கூறப் பட்டுள்ளன. இது காலமும் இடமும் கருதிய சுருக்கமான அமைப்பு.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தெரிந்ததினின்றும் தெரியாததற்கும், அறிந்ததினின்றும் அறியாததற்கும் செல்லுதல் கற்பிக்கும் முறையாதலால் இன்று நடப்பில் உள்ள வடமொழிச் சொல்களை முதலில் சொல்லி அவற்றிற்குரிய தமிழ்த்துறைச் சொல்களைப் பின்னர் சொல்லியுள்ளேன். பலப்பல தமிழிசைத் துறைச் சொல்கள்—சிலம்பிலும் உரையிலும் காணப்பட்டவை. வேறுசில துறைச் சொல்கள்—இயல் தமிழ் இலக்கணச் சொல்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப் பட்டவை.

1. **சுவரம்:—** சுவரம் எனும் சொல்லுக்குத் தமிழ் நிகண்டில்—கோல், தந்திரி, நரம்பு, தந்தி கோவை எனப் பல சொல்கள் வழக்கில் இருந்தன. என்று அறிகிறோம். இவற்றுளே' சுவரம் 'என்பதற்குக் 'கோவை'- எனும் சொல் பெரிதும் ஏற்றது. சுவரங்கள் ஒன்றோடொன்று கோக்கப்படுவதாலும், ஒன்றோடொன்று ஒலிஅலகினால் கோப்பு நிலை அடைவதனாலும் 'கோவை' எனும் பெயரே மிகச் சிறப்புடையது.

ஒவ்வொரு கோவையும் முதற்கோவையாகிய குரலுடன் ஓரளவு ஒலி அமைப்பில் கோக்கப் படுவதாலும் 'கோவை' எனும் பெயர் மிகவும் ஏற்றது.

நரம்பு எனும் பெயரும் சுவரத்திற்கு உண்டு. ஆதியில் யாழின் நரம்புகளினின்றும் சுவரங்கள் பிறந்தமையால், ஆகுபெயராக 'நரம்பு' என்றனர். (பிங்கலம்—1434)

2. **சுவரங்கள் ஏழு:**

ச. ரி. க. ம. ப. த. நி. ச்.

கு. து. கை. உ. இ. வி. தா. கு.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் பெயர்கள் தனித் தமிழ்ப்பெயர்கள். பத்துப் பாட்டிலும் எட்டுத்தொகையிலும் இடம் பெறுவதால், அப்பெயர்களின் தொன்மை வழக்கு அறியலாம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"குடமுதல் இடமுறையாக் குரல், துத்தம்,
கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என
விரீ தரு பூங் குழல் வேண்டிய பெயரே"
சிலப். 17 : 13—

3. **பன்னிரு சுவர ஸ்தானம்:** ஏழு கோவைகளுள் து, கை, உ, வி, தா—எனும் ஐந்தும் (ரி, க, ம, த, நி) ஒவ்வொன்றும் இரண்டு இரண்டு வகை பெற்றுப் பத்து இடம் பெறுகின்றன. இப்பத்துடன் கு. இ. (ச. ப.) சேர்க்கப் (10+2) பன்னிரு இடம் பெறுகின்றன. இந்தப் பன்னிரு ஸ்தானத்தைப் பண்டையோர் 'பன்னிரு வீடு' என்றும் 'பன்னிரு நிலம்' என்றும் கூறினர்.

ச.	ரி.	க.	ம.	ப.	த.	நி.
கு	து	கை	உ	இ	வி	தா
|	^	^	^	|	^	^
1	2 3	4 5	6 7	8	9 10	11 12

1.	2.	3	4.	5	6.	7	8	9.	10	11.	12
ச	ரி	ரி	க	க	ம	ம	ப	த	த	நி	நி
கு	து	து	கை	கை	உ	உ	இ	வி	வி	தா	தா

இவ்வாறு ஐந்து கோவைகள், இரு வகை பெறுவதால் கோவைகள் 12 வீடு, அல்லது 12 நிலம் பெறுகின்றன. (சிலப். 17:13. அடியா. உ).

4. **கோவை வகைகட்குப் பெயர்கள்:** **குறியீடு.**

1 சட்சம்	— சட்சம்	— குரல்	—கு.
2 ரிஷபம்	—சுத்த ரிஷபம்	—குறை துத்தம்	—கு.து
	—சதுஸ்ருதி ரிஷபம்	—நிறை துத்தம்	—நி.து
3 காந்தாரம்	—சாதாரண காந்தாரம்	—குறை கைக்கிளை	—கு.கை
	—அந்தர காந்தாரம்	—நிறை கைக்கிளை	—நி.கை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

4 மத்திமம் — சுத்த மத்திமம் — குறை உழை — கு.உ
— பிரதி மத்திமம் — நிறை உழை — நி.உ

5 பஞ்சமம் — பஞ்சமம் — இளி — இ.

6 தைவதம் — சுத்த தைவதம் — குறைவிளரி — கு.வி
— சதுஸ்ருதி தைவதம் — நிறை விளரி — நி.வி

7 நிஷாதம் — கைசகி நிஷாதம் — குறை தாரம் — கு.தா
காகலி நிஷாதம் — நிறை தாரம் — நி.தா

குறிப்பு :

இன்று நாட்டில் ச,ரி.க.ம.ப.த.நி. குறியீடுகள் பெரிதும் வழக்கில் உள்ளமையாலும், கற்பனைக் கோவை பாடுவதற்குப் (கற்பனை ஸ்வரம் பாடுவதற்குப்) பெரிதும் பயன்பட்டுவிட்டதாலும், இக்குறியீடுகளையே இப்போது பயன்படுத்தி வரலாம். 'குறை ரிடபம்' 'நிறை ரிடபம்' போன்று பெயரிடுதலும் ஏற்றவைகளே. வடமொழியில் கோமள ரிடபம், தீவிர ரிடபம், கோமள காந்தாரம் தீவிர காந்தாரம் என்று பெயரிட்டு வழங்குவது போன்றே— தமிழிலும் குறை ரிடபம், நிறை ரிடபம் என்று பெயரிட்டும் வழங்கலாம்.

(அ)குறை, நிறை எனக் கோவைகள் அடைமொழி பெற்றமைக்குச் சான்று :

''அகநிலைக் குரிய நரம்பின திரட்டி
நிறை குறை கிழமை பெறுமென மொழிப."

சிலப். 8:39. அடியா. உரை.

(ஆ)மேலும் ஏறிய கோவை, இறங்கிய கோவை எனும் வழக்கும் பண்டைக் காலத்தில் இருந்தது ; 'ஏறிய தாரம், இறங்கிய தாரம்' எனவும் கூறிவந்தார்கள். (ஆனாய நாயனார் புராணம் 25. 'ஏறியதாரம்')

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

(இ)மேலும் ரி,க,ம,த,நி,—ஆகிய இறங்கிய வகையை 'அந்தரக் கோவைகள் ஐந்து' என்றும் கூறினர்கள். (எஸ் இராம நாதர் சிலப்பதிகாரத்து இசை நுணுக்கம். ப.67) அம்+தரம்=அந்தரம் எனல் வேண்டும். அம்=அமுங்கிய, தாழ்ந்த; அமுங்கிய தரம்=அம்தரம்=அந்தரம் என இக்கட்டுரை வேர்ச் சொல் விளக்கம் தருகிறது. எனவே துத்தவகை குறிக்க வேண்டுமெனில் அந்தரத் துத்தம் என்றும் உயர்தரத் துத்தம் என்றும் சுட்டலாம். 'அந்தரம்' எனும் சொல்லுக்கு வேறு வகையில் வேர்ச்சொல் விளக்கம் கூறுவோரும் உண்டு.

இதுகாறும் விளக்கிய வாற்ருல் கோவை வகைகளை (அ)குறை கோவை, நிறை கோவை என்றும், (ஆ) ஏறிய கோவை இறங்கிய கோவை என்றும், (இ)அந்தரக் கோவை உயர்தரக் கோவை என்றும் மூவகையில் குறிக்கலாம்.

5. சுருதி : 'சுருதி' எனும் வட சொல்லுக்கு இரு பொருள் (1) ஓத்து (2) ஒலியின் அலகு அளவு. சதுஸ்ருதி சுவரம் என்பதை நாலு மாத்திரைக் கோவை என்றும் நாலு அலகுக் கோவை என்றும் கூறலாம். இதனைத் தமிழில் கேள்வி என்றும் சுட்டினர்கள். மேலும் "நான் கலகினை 'முற்றிசை' என்றும், மூவலகினைப் 'பற்றிசை' என்றும், ஓரலகினைக் 'குற்றிசை' என்றும் கூறினர்கள். (யாழ்நூல் (1974) ப. 80) ஓரலகினைக் 'குற்றிசை' என்றமையால் ஈரல கினை 'நெட்டிசை' என்பது போதரும்.

6. ஆரோகணம்: கோவைகள் முதற் கோவையினின்றும் தொடர்புற்ற ஒரு குறித்த அளவில் உயர்ந்து செல்வதால் — 'ஏறு நிரல் என்று கூறலாம்; அதாவது உயர்ந்து செல்லும் ஒழுங்கான வரிசை என்று பொருத்தமாகப் பொருள் படுகிறது.

7. அவரோகணம்: மேற்கூறியவாறு அமைந்துள்ள கோவைகள் படிப்படியாய்க் குறைந்து இறங்கி வருவதால் —

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

'இறங்கு நிரல்' எனலாம்.

இந்தக் கோவைகட்கு அசைவு எண்கள் உண்டு. 12 கோவைகட்கும் உரிய அசைவு எண்கள் கீழே தரப்பட்டுள்ளன; இவற்ருல் ஏறு நிரலையும் இறங்கு நிரலையும் அறிந்து கொள்ளலாம்.

மாயா மாளவ கௌளை

ச.	ரி.	க.	ம.	ப.	த.	நி.	ச்.
கு.	து.	கை.	உ.	இ.	வி.	தா.	கு.
240	256 |	300	320	360	384	450	480

8. **ஸ்தாயி**: குரல் முதல் ஏறிய தாரம் வரையில் உள்ள 12 கோவைகளின் வரிசை நிலையை ஒரு 'மண்டிலம்' என்றனர். குரல் முதல் தாரம் வரை ஏழு கோவைக்குள் அவற்றின் வகைகள் அடங்குகின்றமையால், 12 கோவைகள் ஆயின. எனவே ஏழு கோவைகள் ஒரு வரிசையாகவும் அதனை முன் பின் அடுத்து, வரிசைகளாகவும் ஒலித்துச் செல்லுவதே 'மண்டிலங்கள்' எனப் பெயர் பெற்றன.

''வட்டம் என்பது வகுக்கும் காலை
ஓர்ஏழ் தொடுத்த மண்டிலம் ஆகும்''
— சிலப். ஆய்ச். 17 அடியா. உரை.

'மண்டிலித்தல்' என்பது மீண்டும் வருதல் எனப் பொருள் படுவது. கு. து. கை. உ. இ. வி. தா என்னும் வரிசை மீண்டும் வந்து மண்டிலித்தலால் மண்டிலம் எனப்பெயர் பெற்றது. ('மண்டலம்' என்பது வேறு பொருள் படுவது. மண்டல்— நெருங்கி அமைதல். மண்டலம்=நெருங்கி அமைந்தது எனப் பொருள்படுவது)

9. **ஸ்தாயி வகை**: மண்டிலம் மூன்ருக வகுத்தனர்.

1. மத்திம ஸ்தாயி—சமன் மண்டிலம்
2. மந்திர ஸ்தாயி—மெலிவு மண்டிலம்
3. தார ஸ்தாயி —வலிவு மண்டிலம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

10. ஸ்தாயி விரிவு: மீண்டும் ஏழுகோவைகளும் வரிசையில் மேலும் உயர்ந்து அமைவதை வலிவின் வலிவு மண்டிலம் என்றோ அதிவலிவு மண்டிலம் என்றோ குறித்தனர். நடு மண்டிலத்திற்கு அடுத்த மண்டிலம் தாழ்ந்து அமையும் போது—மெலிவின் மெலிவு மண்டிலம் என்றோ, அதி மெலிவு மண்டிலம் என்றோ குறித்தனர். பேரியாழிலே மெலிவு, சமன், வலிவு என்னும் மூன்று மண்டிலங்களும் நின்றன. சகோட யாழிலே 3+7+4=14 கோவை வீடுகள் முறையே மெலிவு சமன், வலிவு மண்டிலங்களில் அமைந்திருந்தன என்பார் விபுலாநந்தர் (1974. யாழ் நூல். ப. 80)

11. தாரஸ்தாயு சட்சம்: சமன் மண்டிலக் குரலின் அசைவு எண் 240 எனக்கொண்டால், அடுத்த வலிவு மண்டிலக் குரலுக்கு—அசைவு எண் 480 எனக் கண்டுபிடித்துள்ளனர். எனவே வலிவுமண்டிலக் குரல் (240+240=480) இரட்டித்து ஒலிக்கின்றதால்—பண்டைத் தமிழர்—'இரட்டித்த குரல்' என்றும் 'உயர் குரல்' என்றும் கூறினர்கள். 'ஒத்த கிழமை உயர் குரல் மருதம்' என்றார் அடியார்க்கு நல்லார் (சிலப். 8:39. அடியா. உரை).

12. பூர்வாங்கம், உத்தராங்கம்:

கு. து. கை. உ (ச. ரி. க. ம) எனும் கோவைகளின் வரிசைப் பகுதியை 'முன்னர்ப் பாகம்' (பூர்வாங்கம்) என்றனர். இ. வி. தா. கு (ப. த. நி. ச்) என்னும் கோவைகளின் வரிசைப் பகுதியை 'பின்னர்ப் பாகம்' (=உத்தராங்கம்) என்றனர். எட்டுக் கோவை வரிசையில் முன்னர் உள்ள 4கோவைப் பாகத்தை முன்னர்ப்பாகம், என்றும் பின்னர் உள்ள 4 கோவைப் பாகத்தைப் 'பின்னர்ப் பாகம்' என்றும் கூறியது மிக மிகப் பொருத்தம்,

தாரப் பாகமும் குரலின் பாகமும்
நேர்நடு வண்கிளை கொள்ள நிற்ப
முன்னர்ப் பாகமும் பின்னர்ப் பாகமும்
விளரி குரலாகும் என்மனார் புலவர்—சிலப்பதிகாரம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"முன்னர்ப் பாகம்—ஸ்தாயியில் பூர்வாங்கம்; பின்னர் பாகம்—ஸ்தாயியில் உத்தராங்கம்'' — என்றார் அறிவர் எஸ். இராமநாதனுர் (1596)சிலப். இசை நுணுக்கம். ப. 38).

இனி, கோவைப் பயிற்சி வரிசைகளாகிய "ஸ்ராவளி, மேல் ஸ்தாயி வரிசை, மந்தர ஸ்தாயி வரிசை, தாட்டு வரிசை, சண்டை வரிசை, அலங்கார வரிசை" முதலிய பெயர்களுக்கு உரிய தமிழ்ச் சொல் காண்போம்.

13. சுவராவளி : என்பது சுவர + ஆவளி எனக் கூட்டி அமைந்தது. ஆவளி = வரிசை. எனவே சுவரங்களின் வரிசை எனப் பொருள் படுவது. இவை 15 ஆம் நூற்றுண்டில் புரந்தர தாசரால் (1484 – 1564) இயற்றப் பட்டவை: எனவே இவற்றிற்கு இன்று நேரிய சீரிய ஆக்கச் சொல் காணலாம். சுவராவளி = **கோவை வரிசை'** அல்லது **'கோவைப்பயிற்சி வரிசை'** எனல் பொருந்தும்.

சுவராவளியிலே – 9 முதல் 12 வரையுள்ள வரிசைகளுக்குச் சஞ்சாரி வரிசை என்ற பெயர் உண்டு. (சஞ்சாரம் – திரிதல், நடத்தல்) இதனை நடைப்பாங்கு வரிசைகள் எனலாம், இவ்வரிசைகளிலே — ஒரு தாள நடை இருப்பதால், இப்பெயரால் சுட்டலாம்.

14. ஹெச்சு ஸ்தாயு வரிசை : இவை உயர்குரல் அல்லது இரட்டித்த குரலுக்கும் உயர்ந்துள்ள கோவைகளில் உழை வரை பயிற்சிகளாக அமைப்பதால் — **'வலிவு மண்டில வரிசை'** எனலாம்.

15. மந்தர ஸ்தாயு வரிசை : இவை தொடக்கக் குரலுக்கும் தாழ்வான கோவைகளின் பயிற்சியாக அமைவதால் — **'மெலிவு மண்டில வரிசை'** எனல் உரிய சொல்லாகும்.

16. தாட்டு வரிசை : கோவைகள் ஊடே விடுத்துத் தாண்டி அமைந்து செல்வதால் — **'தாண்டு வரிசை'** எனல்வேண்டும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

17. **அலங்காரம்:** தாளத்திற்கேற்பக் கோவைகளை அடுக்கு வதால் — 'அணி அடுக்கு' எனலாம். எந்தத் தாளத்தில் அமைந்துளதோ அந்தத் தாள அணி அடுக்கு என்க. 'எண்மை எண் தாள அணி' 'அறுமை எண் தாள் அணி' என்னும் வகையில் பெயரிடுக.

18. **ஐண்டை வரிசை:** கோவைகளை இரண்டு இரண்டாக அடுக்கிக் கொண்டே செல்வதால் — 'இரட்டை அடுக்கு' எனலாம். இவ்வடுக்குகளிலே இறுதியிலோ முதலிலோ ஒற்றைக் கோவையும் வரலாம் எ—டு. 'சசரிரிக— —' போன்ற இரட்டை அணி.

19. **கிரம திரிகாலச் சாதகம்:** ஒரு எண்ணிக்கைக்கு ஒரு கோவையாகவும்,—பின்னர் இரு கோவையாகவும்,—பின்னர் 4 கோவையாகவும் பாடியும் ஒவ்வொரு காலக் கோவையும் தாளவட்டணையில் (ஆவர்த்தத்தில்), முடிப்பதுவே—நேர் **முக்காலப் பயிற்சி** எனப்படும். கோவை வரிசைகளை இவ்வாறு பாடிப் பயிற்சி பெறுதலால் தாள அறிவும் கோவையின் ஒலிப்பு அறிவும் பெறலாம். எ-டு:

சா; ரீ; கா; மா; பா; தா; நீ; ச்ா;

சாரீ காமா பாதா நீச்ா ச்ாநீ தாபா மாகா ரீசா

சரிகம பதநிச் ச்நிதப மகரிச சரிகம பதநிச் ச்நிதப மகரிச

20. **அநுலோம விலோம திரிகால சாதகம்:** முக்காலப் பயிற்சியை (திரிகாலச் சாதகத்தை) இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று—கிரமத் திரிகாலச் சாதகம். இதிலே ஒவ்வொரு காலச் சொல்களும் தாள வட்டணையிலே (ஆவர்த்தத்திலே) முடிதல் வேண்டும். மற்றது—அநுலோம விலோம திரிகால சாதகம். இதிலே—10 வரி அல்லது 10 வட்டணை (ஆவர்த்தம்) கொண்ட ஓர் அடுக்கு அணியை 5 வட்டணைக்குள் ஒருமுறை ஏறுநிரலில் ஒன்றும் இரண்டாம் மூன்றும் காலங்களில் பாடிப் பின்னர் தொடர்ந்து

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மூன்றும் இரண்டாம் ஒன்றும் காலத்தில் பாடி முடிப்பது. இவ்வாறு பாடுங்கால் 10 வட்டணை அணி, 5 வட்டணைக் குள் அடங்கும்.

10 வட்டணை அணிகட்கே இம்முறை பொருந்துவதாகும். கீழேகாட்டப்படுவது நாலெண்தாள அணி: எ—டு:

1. காலம்	விழுக் காட்டுச் சொல்	கோவை அடுக்கு 1	2	3	4	வட் டணை
முதல் நடை	1/1	சா ;	ரீ ;	கா ;	மா ;	1
வாரம்	2/2	ரீகா	மாபா	காமா	பாதா	2
கூடை	4/4	மபதநி	பதநிச்	ச்நிதப	நிதபம	3
வாரம்	2/2	தாபா	மாகா	பாமா	காரீ	4
முதல் நடை	1/1	மா ;	கா ;	ரீ ;	சா ;	5

இது ஓர் அழகிய பயிற்சி; முக்கால நடைகளாகிய முதல் நடை, வாரம், கூடை என்பன தொடர்ந்து செல்லுகின்றன. தாளத்தின் நடை மாறுமல் இருக்கின் றது. சதுக்சுர ஏகதாளம், அதாவது நான்கெண்தாளம். மாறுதுசெல்லும் தாள நடையில் கோவைச் சொல்நடை வளர்கின்றது. எனவே அநுலோமா திரிகாலம் ஒருகுறித் தாளத்தில் 'முக்கால ஏறு நடை' என்றல் வேண்டும்.

விலோமா திரிகாலம் என்பதற்கு ஒருகுறித்த தாளத் தில் 'முக்கால இறங்கு நடை' —என்ற பெயரிடுவதால் மாணவர்கள் சொற்பொருளும் அறிந்து இன்பம் கொள் கின்றூர்கள்; எளிமையாக நினைவில் வைக்கலாம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

முக்கால ஏறு நடை (அநுலோமா) என்று குறிக்கும்போது முதல் நடை, வாரம், கூடை எனும் மூன்று நடைகள் ஏறு வரிசையில்—1/1, 2/2, 4/4 எனும் விழுக்காட்டு அளவில் ஏறிச் செல்லுகின்றன.

21. முக்கால இறங்கு நடை (விலோமா) என்று குறிக்கும்போது, கூடை, வாரம் முதல் என்னும் மூன்று நடைகள் இறங்கு வரிசையில் 4/4, 2/2, 1/1, என்னும் விழுக்காட்டளவில் இறங்கிச் செல்லுகின்றன.

22. முக்கால ஏறு இறங்கு நடை (அநுலோமா விலோமா) என்னும் தொடரால்—மேலே விளக்கிய இருவகை நடைகளையும் கொள்ளுதல் வேண்டும். (ஒப்பு நோக்குக:-பேராசிரியர் பி. சாம்பமூர்த்தியாரின் தென்னிந்தியச் சங்கீதம் புத்தகம் I. 9ஆம் பதிப்பு. 1978. ப. 99).

பிரதிலோமம் என்பது பாட்டின் வேகம் ஒரேதரமாய்ச் செல்ல, தாளத்தின் வேகத்தை முறையே 1,2,3 ஆம் காலத்தில் எண்ணிப் போடுவது என்ற கருத்தும் உள்ளது. இது சாம்ப மூர்த்தியார் கருத்துக்கு முரண்பட்டது.

நடைகள், கதிகள் பற்றிய விளக்கம் கோவைப் பயிற்சிமுறைக்காகச் சுட்டிக் காட்ட நேர்ந்தது. தாளப் பகுதியில் அதன் விரிவு காண்க.

23. சுவரப் பிரயோகம்: பண்களைப் பாடுங்கால், கோவைகளை அசைத்தும் வழுக்கியும் தாண்டியும் வழங்குவதைக் 'கோவை வழக்கு' என்பார்கள். "பிரயோகி — வழங்கு, பயன்படுத்து" என்பது வெஃப்ரீசியகசு அகராதி தரும் பொருள். சுவரங்களை வழங்குவது பற்றிய சமத்கிருதத் தொடர்கள் சில வருமாறு:-இராகச் சாயா ஸ்வரம், அந்நிய ஸ்வரம், வர்ஜ ஸ்வரம், அநுஸ்வரம் சிட்டை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஸ்வரம், கற்பனு ஸ்வரம் ஸ்வயம்பு ஸ்வரம் விக்ருதி ஸ்வரம், பூரண நியாச ஸ்வரம், அல்ப நியாச ஸ்வரம், விஷே சஞ்சாரம், சர்வ ஸ்வர கமக வரிக ரக்தி, ஸ்வர ஸ்தானம், அபூர்வப் பிரயோக ஸ்வரம், என்பன போன்ற பலப்பல சொல்களை நிரப்பியே பண்களை விளக்கி எழுதியுள்ளனர். இந்நிலை சென்ற ஆயிரம் ஆண்டுகளாக நீடித்தும் வளர்ந்தும் வந்துள்ளது.

ஒரு அறிவியலில் துறைச்சொல்கள் இன்றியமையாத உரிமையாகும். புதுச் சொல்களை ஆக்குந்தோறும் தமிழ் மொழிச் சொல்களை வெறுத்துப் பகைத்துத் தள்ளியது ஒருபுறம், வேண்டுமென்றே வலிந்து வடமொழித்துறைச் சொல்களைப் புகுத்தியது ஒருபுறம்; வடமொழிதான் உயர்வு என்றும் அதுவே தெய்விக மொழி என்றும் எண்ணிப் புதுச் சொல் வழங்கியது ஒரு புறம். இவ்வாருக—இசைத் துறைக்குரிய தமிழ்ச் சொல்கள் வழங்காமல் தேய்ந்து மாய்ந்தன. பிற பிற அறிவியல் நூல்களில் தமிழ்த் துறைச் சொல்கள் வளர்ந்துள்ளமை போல—தமிழிசைத் துறைச் சொல்கள் வளர்தல் இன்றியமையாதது. எனவே கோவை வழக்குக் குரிய சொல்களை இனி வரிசையாய்க் காண்போம்.

24 இராகச் சாயா ஸ்வரம்: ஒரு பண்ணிற்குரிய ஒலி வண்ணத்தைச் சிறப்பாய்க் குறித்துச் காட்டும் கோவையைப் பண்வண்ண கோவை என்றும், பண் சாயற் கோவை என்றும், பண் நிறக் கோவை என்றும் கூறுதல் தகும்.

25. அந்நிய ஸ்வரம்: தாய்ப் பண்ணிற்கு உரித்தல்லாத கோவையை இடைப் பிறவரற் கோவை எனல் வேண்டும். கோவைத் தொகுப்புகளில், பண்ணிற்குப் புறமான கோவை வந்து ஒலிக்கும். எ. டு:— காம் போதிப் பண் அரிகாம் போதியின் கிளைப் பண்ணுகும். எனவே குறை நிடாதமே அதற்குரியது. ஆனல் இடையிலே பிற கோவை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

யாகிய நிறை நிடாதம் ஒலிக்கும்:- ச் நி* பதச்ா. இப் பண்ணில் நிறை நிடாதம்—இடைப் பிறவரற் கோவை. இவ்வாறு வரும் கோவையை உடுக்குறி (நட்சத்திரக் குறி) இட்டுக் காட்டுவது வழக்கம். பிலகரியில் சரிக பதநி* தபா எனனும் வழக்கில் குறை நிடாதம் இடைப்பிற வரலாகும்: ஏனெனில் பிலகரியானது சங்கராபரணத்தின் கிளைப் பண்ணுகையால், அதற்குரியது நிறைநிடாதமே.. இடைப்பிறவரலும் இன்னவாறு தான் வருதல் வேண்டும் என்னும் நெறிமுறையும் தென்னக இசையில் உண்டு

26. ஸ்வகீய ஸ்வரம் : ஒரு பண்ணிலே அப்பண்ணிற்கே உரிய கோவையும், இடைப்பிறவரற் கோவையும் வரின், அப் பணணிற்கே உரிமை பூண்ட கோவையைக் **'கிழமைக் கோவை'** என்றே, **'உரிமைக் கோவை'** என்றே குறித்தல் வேண்டும். எ. டு:— பிலகரிப் பண்ணிற்கே உரிமை பூண்ட கோவை நிறை நிடாதம் ஆகும். குறை நிடாதம்— இடைப் பிறவரற் கோவையாகும். -ச்சநி தபமகா- கபதநி* தபா' என்னும் கோவை வழக்கில் கிழமைக் கோவையைக் குறியிடாமலும் இடைப் பிறவரலைக் குறியிட்டும் காட்டு தல் மரபு. பண்ணுக் குரிமை அல்லது கிழமை பூண்டது நிறை நிடாதம், இடைப் பிறவரற் கோவை—குறை நிடாதம்.

27. ஸ்வம்பு ஸ்வரம்: ஒரு நீண்ட இசைத் தந்தியை மீட்டி விடுத்த பின்னர், அதன் நீளத்தில் முதலில் இரு மடி கணணியும் (loops) பிறகு படிப்படியாய் 3, 4, 5, மடி கண்ணிகளும் என அதிகரித்துக் கொண்டே போகும் போது, சில கோவைகள் ஒலிக்கும். தம்பூராவை மீட்டும் போது—மெலிவு மண்டிலத் தந்தியில் நிறை கைக்கிளை (கா) யும் இளித் தந்தியில் நிறை துத்தமும் (ரி) கேட்கும். இவை தந்தி அசைந்து அடங்குங்கால் தாமே தோன்றி ஒலிக்கும்; ஆகையால் **'தாம் தோன்றிக் கோவை'** எனல் வேண்டும்;

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

(over tones) தந்தியில் உண்டாகும் அசைவுகளை மடி கண்ணி எனவும் தந்தியின் நீளத்தை (length) 'நீளம்' எனவும், தந்தியின் இறுக்கத்தை (Tension) விரைப்பு அல்லது இறுக்கம் எனவும், தந்தியின் கனத்தைப் (Thicknees) பருமன் எனவும் சுட்டுதல் சிறப்பாகும்.

அவிக்ருத ஸ்வரம் அல்லது அசலஸ்வரம்: குரலும் இளியும் (ச. ப.) ஆகிய இரண்டு கோவைகளிலும் குறை நிறை என்ற வகைகள் கிடையா. எனவே இவை 'வகை பெருக் கோவைகள்' எனப்படும்.

(மேலும் தெளிவு வேண்டுவோர் காண்க:

சிலப்பதிகார இசை நுணுக்கம், அறிவர் எஸ். இராம நாதனுர் (1956) ப. 71.)

28. பிரக்கிருதி ஸ்வரங்கள் : து,கை.உ வி தா (ரி.க.ம.த.நி) என்னும் ஐந்து கோவைகளும் ஈரிரண்டு வகைபெறும் காரணத்தாலே, இவை 'வகை பெறு கோவை' எனப்படும். இவ்வகையுள் குறைக் கோவையை 'சுத்த சுவரம்' என்றும் இயல்புக் கோவை என்றும் குறிக்கலாம். (பிரகிருதி =இயல்பு) விக்ருதிஸ்வரம் என்பன நிறை கோவைகள் (வி= அதிகம்; கிருதி=செய்யப் பட்டது. விக்ருதி=நன்ருகச் செய்யப்பட்டது.)

29. பூரண நியாச ஸ்வரம்: நியாசம் என்பது நீண்ட காலம் ஒப்படைப்பாக வைப்பது (மதுரைத் தமிழ்ச் சங்க அகராதிப் பொருள்). ஒருபண்ணில் ஒரு கோவையை நீண்ட நேரம் நிறுத்தி ஒலிப்பதை—நிறுத்தல் கோவை என்றும் நீள் ஒலிப்புக் கோவை என்றும் நெடுமை ஒலிக் கோவை என்றும் கூறலாம். சங்கரா பரணத்தில் காந்தாரமும், மத்தியமாவதியில் ரி ம.நி. என்பனவும் நிறுத்துதல் கோவைகளாகும் என்பர்.

30. (அல்ப நியாச ஸ்வரம்) வங்கணஸ்வரம் : பண்பாடுதலில் மிகக்குறுகி ஒலிக்கும் கோவையை 'குறுமை ஒலிக் கோவை'

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

எனல் வேண்டும். எடுத்துக்காட்டாக பைரவிப் பண்ணில் நிறை தைவதத்தைக் கூறுவார்கள். ஆரபியில் 'ம.க.ரி.ச' வரிசையில் 'க' – சிறிதே ஒலித்தல் வேண்டும்.

31. அநுஸ்வரம் : கோவைகளை அழுத்தமாக ஒலிக்கும்போது, பக்கத்துக் கோவையின் நுண் ஒலிமம் சிறிது கூட்டி ஒலிக்கப்படும். இதனை நுண் ஒலி நல்கு கோவை என்றும், கூட்டப்படும் ஒலியை – நுண் ஒலிமம் என்றும் குறிக்கலாம். எடுத்துக் காட்டாக, சுத்த சாவேரியில் 'ரி→தா' என்று வழுக்கி ஒலிக்கும் போது இடையில் ஒலிக்கும் 'ச்' – நுண் ஒலி நல்கு கோவை எனலாம். சுருக்கமாக நுண் ஒலி மக் கோவை எனலாம்.

32 வர்ஜ ஸ்வரம் : பண்களுக்குரிய கோவை வரிசையில் ஓரிரு கோவைகள் நீக்கப் பெற்றுக் கிளைப்பண் ஆக்கம் பெறுகிறது. நீக்கப் படும் கோவையை ஒரூஉக் கோவை எனல் வேண்டும். (ஒப்பு நோக்குக : ஒரூஉ மோனையில் —மோனை எழுத்துகள் இடையில் உள்ள சீர்களில் இல்லாமல் தொடுப்பது ஆகும்.) ஒருவுதல் = நீங்குதல். ("பொய்யது என்பதை ஒருவி மெய்யுணர்தல் போதம்" – தாயு. ஆசைப்.29) எனவே வர்ஜ ராகத்தை "ஒரூஉப்பண்" என்று பெயரிடல் – பண்டைத் தமிழ் இலக்கணத்தின் வழிப் பெயரிடல் ஆகும்.

33 விசேஷ சஞ்சாரா : ஒரு பண்ணுக்குரிய வரிசையில் கோவைகள் ஒலிக்காமல், வேறுவகையில் இனிமை ஊட்டும் பொருட்டு ஒலிப்பதைச் 'சிறப்பு வழக்கு' என்றும் 'சிறப்பு அமைப்பு' என்றும் கூறலாம். எ-டு:- சங்கராபரணப் பண்ணில் ச்நிப என்று அமைப்பது, ச்தப என்று அமைப்பது முதலியவைகளைச் சிறப்பு வழக்கு எனலாம்.

34 தாதுபிரயோக ஸ்வரம் : ஒரு கோவைத் தொகுப்பில் தொடக்கக் கோவையும் முடிவின் கோவையும், இணை, கிளை, நட்பு எனும் ஒன்றன் வழியில் ஒத்து ஒலிப்பது

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பெரிதும் இன்பம் பயக்கும். ஒத்து இயல் எனலாம். சிலம்பு "இசைபுணர் குறிநிலை" என்றது (சிலப்.8:33)

35 **விசேஷ ஸ்ருதி ஸ்வரம்:** (அ) ஒரு இராகத்தின் சிறப்பு ஒலிவண்ணத்தை அல்லது ஒலிநிறத்தைத் தெளிவாகக் காட்டும் கோவையே—'**சிறப்பு நிறக் கோவை**'. எ—டு: தேவ காந்தாரிப் பண்ணில் காந்தாரத்தின் ஒலியைக் கூறலாம்.

(ஆ) ஒருபண்ணிற்குரிய ஒருகோவை சற்று அலகு அளவில் கூடியோ, குறைந்தோ ஒலிக்கும். அதுவும் சிறப்பு நிறக் கோவையே. எடுத்துக் காட்டாகத் தோடியில் கிச்க்காரிச் எனும் பிடியில் 'க'—சிறப்பு நிறக் கோவையே.

36 **அந்நிய ஸ்தானஸ்வரம்:** ஒருகோவை, அதற்குரிய இடத்தை விடுத்து—அடுத்த கோவையின் இடத்தில் ஒலிப்பதால், '**பிறநிலக் கோவை**' எனலாம். எ—டு: கானடாவில் 'சரிபக' என்பதில் காந்தாரமானது பஞ்சமம் தொடங்கி ஒலிப்பதால், காந்தாரத்தைப் **பிறநிலக் கோவை** எனலாம்.

37 **ஜீவஸ்வரா:** ஒரு பண்ணில் அடிக்கடி ஒலிப்பதும், நீண்டு ஒலிப்பதும், பண்ணின் சுவை யின்பத்தை வெளிப்படுத்துவதும் ஆகிய செயல் செய்கின்ற கோவையைத் '**தனிச் சிறப்புக் கோவை**' எனலாம்.

38 **கிரக ஸ்வரா:** பண்ணினைத் தொடங்கும் கோவையைத் '**துவக்கக் கோவை**' எனலாம். மங்கலமாக முதன்முதல் தொடங்குவது எனப் பொருள்படும் சொல் — '**துவக்கம்**' என்பது. ஒரு பண்ணிற்கு இரண்டு மூன்று துவக்கக் கோவைகள் இருப்பதும் உண்டு.

39 **அம்ச ஸ்வரா:** ஒரு பண்ணில் பல கோவைகள் கூடி ஒலித்து, அடிக்கடி வந்து வந்து முடிவு கொள்ளும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கோவையை நிலைக்கோவை என்று மொழியலாம். நிலைக் கோவையைச் சுற்றிக் கற்பனைக் கோவைகள் (கற்பனாஸ்வரம்) அமைந்து ஒலித்து நிலைக் கோவையில் வந்து வந்து முடியும்.

தற்கால வளர்ச்சி:

சாரங்க தேவா, தம் சங்கீத ரத்னாகரத்தில் (கி.பி. 13.நூ.) ஒரு இராகத்திற்குப் 13 இயல்புகள் கூறியுள்ளார்: 1. கிரகா, 2. அம்சா, 3. தாரா, 4. மந்தரா, 5. நியாசா, 6. அபன்யாசா, 7. சன்யாசா, 8. விந்யாசா, 9. பாகுத்வா, 10. அல்பத்துவா, 11. அந்தர மார்க்கா, 12. சாடவா, 13 ஔடவா என்ற இயல்புகளைக் கூறுகின்றார். இவற்றுள்ளே—சாடவ, ஔடவம் என்றவை இராக வகைகளே. அந்தர மார்க்கா என்பது இராகவழி. மற்றவை சுவரம் பற்றிய குறிப்புகளாம். இவற்றுள் சில இன்று வழக்கு இழந்தன என்றும், வெறும் ஏட்டிலே மட்டும் படிக்கப் படுகின்றன என்றும், அண்மையிலே இராகம் பற்றிய ஆய்வும் அறிவும் இவற்றிலும் பெரிதும் வளர்ந்துள்ளன என்றும் பேராசிரியப் பெருந்தகை பீ. சாம்ப மூர்த்தி அவர்கள் கூறியுள்ளார்.★

இப் பெரியாரின் குறிப்புகளினின்றும், கோவை பற்றிய பற்பல இயல்புகளையும் இலக்கணங்களையும்

★ "A few of these lakshanas have either become obsolete or are of mere academic interest to us at the present day. As a result of the progress made in music, during the recent centuries, we are now in a position to give a more amplified and scientific discription of the ragas and define their scope in clearer and more accurate terms"—South Indian Music Book. III (1973) 81.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அண்மை நூற்றாண்டுகளிலேதாம், நாம் ஆய்ந்தறிந்து வடமொழிச் சொல்களால் விளக்கியிருக்கின்றோம் என்பது தெளிவு. எனவே அந்த வடமொழிச் சொல்களுக்குத் தமிழ்ச் சொல்கள் இன்று அமைத்துக் கொள்ளல் சிறப்பும் செம்மையும் ஆகும்.

★ பிற அறிவியல் துறைகளில் — துறைச் சொல்கள் தமிழில் ஆக்கம் பெற்றுள்ளமை போல் இசையியலிலும் பெற்றிடல் இன்றியமையாதது.

★ வடமொழிச் சொல்களின் பொருள் உணர்ந்து கொள்ளல் கடினம்; தமிழ்ச் சொல்களின் பொருளை எளிதில் அறிந்து கொள்ளலாம்; மனதில் நிலைக்க எளிதாகும்.

★ ஒரு துறையைத் தாய்மொழிச் சொல்களால் விளக்காவிட்டால் - அத்துறை தாய்மொழிக்கு உரியது ஆதல் இயலாது.

★ தமிழ் மொழி சொல்வளம் மிக்கது; எத்தகு கருத்தையும் வெளியிடும் ஆற்றல் பெற்றது.

★ மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய திராவிட மொழிகளை இணைப்பது தமிழே. இம்மொழிகட்குள் தமிழ்ச் சொல்களே அடிப்படையாய் மிகுதியாய் நிற்பன.

— தென்னக இசை தென்னகத்திற்கே உரியது —

வீ. ப. கா. சுந்தரம்,

பேராசிரியர். த. இ. கல்லூரி மதுரை - 10

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

2. பண்ணுப் பகுப்பு இயல்

எல்லாம் தமிழில் மலர்தல் வேண்டும். எங்கும் தமிழில் இயம்புதல் வேண்டும். எனவே இன்று கல்லூரி களில் வழங்கிவரும் இசைத்துறை வட சொல்களுக்கு உரிய தமிழ்ச் சொல்களை இச்சிறு நூல் முதன் முதல் தொகுத்தும் வகுத்தும் தருகின்றது. பஞ்சமரபு, சிலப்பதிகாரம், சிலப்பதிகாரத்தின் இரு பெரும் உரை, நிகண்டுகள் முதலியவற்றினின்றும் தொகுத்தவைகளே பெரும்பாலான சொல்கள் ஆங்காங்கு ஓரிரு சொல்களே புதியனவாய் ஆக்கப்பட்டவை. இந்நூல் முதன் முயற்சி. மேலும் கூடி ஆய்ந்து சிறந்தனவற்றைக் கண்டு கொள்ளல் வேண்டும். பலநெடும் நூற்றாண்டுகள், இசைத்துறைச் சொல்கள் வட சொல்களாகவே வழங்கி இருந்தாலும், பண்டைக் காலத்துச் சொல்கள் இன்று வழக்குக்கு வருதல் இன்றியமையாதது. ஒரு நாட்டின் செல்வம் – சொல்களாகும்; ஒரு கலை நிற்கும் அடிப்படை நிலம் – கலைத்துறைச் சொல்லாகும் (Technical Terms).

40. ராகம்: இது பெரும் பண்ணையும், கிளைப் பண்ணையும் குறிப்பது. இதற்குரிய பண்டைப் பைந்தமிழ்ச் சொல்-பண். 'கோவைகளைக் கோத்து, சுவைகள் தோன்றப் பண்ணப்', பட்டமையால் 'பண்' எனப் பெயர் பெற்றது. வெறும் கோவைகளைக் கோத்துவிடுவதால் பண் அமைந்து விடாது. ஒவ்வொரு கோவையையும் நீட்டியோ, குறுக்கியோ, வழுக்கியோ, அசைத்தோ ஒலிப்பதால் எண் சுவைகள் தோன்றும். இவ்வாறு பண்ணப் பட்டது 'பண்'.

'அராகம்' என்றது பண்டை இசையிலக்கணத்தில் – கலிப்பாவின் உறுப்புகளுள் ஒன்று. (தொல். பொ.464) அராகித்தில் – கடுகிச் செல்லுதல்; விரைந்து செல்லுதல். (தொல். பொ. 464. உரை).

பண்ணிலே எட்டுவகை நுண் ஒலிகள் தோன்றும்:– (1) எடுத்தல், (2) படுத்தல், (3) நலிதல், (4) கம்பிதம், (5) குடிலம், (6) ஒலிப்பு, (7) உருட்டு, (8) தாக்கு என்னும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

எட்டுவகை ஓலிச் செயல்கள் விளங்கி, உணர்ச்சியும் சுவையும் ஊட்டுவதே பண் என்று வரையறுக்கப்பட்டது. உள்ளோசை (கமகம்) எனும் பகுப்பில் இவை எட்டும் விளக்கப்படும்.

பாவோ(டு) அணைதல் இசை என்றார்; பண் என்றார்
மேவார் பெருந்தானம் எட்டானும் — பாவாய்
எடுத்தல் முதலாய் இருநான்கும் பண்ணிப்
படுத்தமையால் பண் என்று பார்

—சிலப். (3) அரங். 26. அடியா...உரை.

பண் தோன்றும் இடங்களே—பெருந்தானம் எட்டு:— அவை நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணுக்கு, உதடு, பல், தலை என்பன. (சிலப் 3:26. உரை)

41. மேளகர்த்தா: இதற்குரிய தமிழ்ச் சொல்கள்— **தாய்ப் பண், தலைமைப் பண், பெரும் பண்** என்பன. 'ஜனக ராகம்' என்பதற்குத் தாய்ப்பண் என்றும், 'மேளகர்த்தா' என்பதற்குத் தலைமைப் பண் என்றும் சுட்டலாம்.

42. ஜன்ய ராகம்: தாய்ப்பண்ணினின்றும் பிறந்த சிறு பண்களே **கிளைப்பண்கள்**. கிளைத்த பண்களே கிளைப்பண்கள். கிளைத்தல்=பிரிதல், தோன்றி அமைதல். இவற்றைத் **திறம்** என்றனர். (திறம்=வகை) (திறந்தது= பிரிவுற்றது)

43. வர்ஜ ராகம்: ஏறு நிரலில், அல்லது இறங்கு நிரலில் அல்லது இரண்டு நிரலிலும் கோவைகள் விடுபட்டு(நீக்கப் பட்டு) இசைக்கும் பண்—'ஒரூஉப்பண்' ('வர்ஜ ஸ்வரம்') —எண் 32 இன் குறிப்புகளை நோக்குக).

44. பண் பகுப்பு: பண்டைக் காலத்தே பண்களைப் **பெரும் பண்** எனவும் **திறப் பண்** எனவும் இருபெரும் பிரிவு ஆக்கினார்கள். திறப்பண்களை மூன்றாகப் பகுத்தனர்:- (1) பண்ணியல் திறம், (2) திறம், (3) திறத்திறம். இவை மூன்றும் ஒரூஉத் திறங்கள். ஒருவிய திறம் என்பது கோவைகள் நீக்கப்பட்ட திறம் எனப் பொருள்படுவது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

45. (i)

வடசொல்		தமிழ்ச்சொல்		ஏறல் + இறங்கல்
1 சம்பூர்ணம்	...	பெரும்பண்	...	7 + 7
2 சாடவம்	...	பண்ணியல்	...	6 + 6
3 ஔடவம்	...	திறம்	...	5 + 5
4 திறத்திறம்	...	சதுர்த்தம்	...	4 + 4

46. (ii)

5 சம்பூர்ண...சாடவம் பண் — பண்ணியல் ... 7 + 6

6 சம்பூர்ண...ஔடவம்பண் — திறம் ... 7 + 5

7 சம்பூர்ண...சதுர்த்தம் — பண் — திறத்திறம் ... 7 + 4

47. (iii)

8 சாடவ சம்பூர்ணம் ... பண்ணியல் — பண் ... 6 + 7

9 சாடவ ஔடவம் ... பண்ணியல் — திறம் ... 6 + 5

10 சாடவ சதுர்த்தம்... பண்ணியல் — திறத்திறம்...6 +4

48. (iv)

11 ஔடவ சம்பூர்ணம் ... திறம்-பண் 5 + 7

12 ஔடவ சாடவம் ... திறம்-பண்ணியல் 5 + 6

13 ஔடவ சதுர்த்தம் ... திறம்-திறத்திறம்- 5 + 4

49(v)

14 சதுர்த்த சம்பூர்ணம் ... திறத்திறம்-பண் 4 + 7

15 சதுர்த்த சாடவம் ... திறத்திறம்-பண்ணியல்4 + 6

16 சதுர்த்த ஔடவம் ... திறத்திறம் - திறம் 4 + 5

3. பண்ணுப் பெயர்த்தல் இயல்

50. கிரகபேதம் : பண்டைத் தமிழிசை வல்லுநர்கள் செம்பாலையை அடிப்படைப் பெரும் பண்ணாகக் கொண்டனர். செம்பாலை என்றது 'அரிகாம் போதி' என்னும் பண்ணோ. இதனிலிருந்து, துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஆறு கோவைகளைக் குரல் குரலாகக் கொண்டு ஆறு பண்களைத் தோற்றுவித்தனர். சமன் மண்டிலத் துத்தத்தை அடிப்படைக் குரலாகக் கொண்டு வலிவு மண்டிலத் துத்தத்தை உயர் (அல்லது இரட்டித்த)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

குரலாகக் கொண்டு ஊடே தாய்ப்பண்ணிற்குரிய வீடு களில் கோவை வகைகளைக் கொள்ளுவதே "கிரகபேதம்" செய்தல் இதற்குப் பண்டைத் தமிழர் பல்வேறு பொருள் நிறைந்த பெயர்களை வழங்கி வந்தனர்.

பாலை பண்ணுதல் (பதிற்றுப். 57 : 8),
பாலை பெயர்த்தல் (பரிபா. 7 : 77),
பண்ணுப் பெயர்த்தல் (பதிற்றுப். 65 : 14),
குரல் குரலாகக் கொள்ளல் (சிறுபாணு : 228) முதலியவற் ருலும் 'துத்தம் குரலாகக் கொள்ளல்' 'கைக்கிளை குரலாகக் கொள்ளல்' (சேந்தன் திவாகரம்) முதலிய பல்வேறு தொடர்களாலும் பாட்டும் தொகையும் தோன்றிய பண் டைக் காலந் தொட்டு வருவன.

செந்தமிழிசை யியலில் செவ்விய சீரிய அறிவு சான்ற சேக்கிழார் பெருமானுர், தாமே முதன் முதல் படைத் தளித்த சொல்லே '**மாறு முதல் பண்ணல்**' (ஆனய நாயனுர். 25) என்பது; இது பொருள் நிறை புனிதச் சொல். இது போலவே ஆங்கிலத்தில் குரலாகிய முதற் கோவையைப் பெயர்த்தல் என வழங்குவது (Modal Shift of the Tonic Note') ஒப்பு நோக்கி மகிழற் குரியது. இது மிக்க சுருக்க நூலாகையால் மாறு முதற் பண்ணும் முறையை இங்கு விளக்க வில்லை. மாறுமுதல் பண்ணும் முறைகளில் இன்று கருத்து வேற்றுமைகள் பலப்பல உண்டு,

51. **வக்ர ராகம்** என்பதில் கு, து, கை, உ, இ, வி, தா— எனக் கோவைகள் நிரலே செல்லாது, முன்பின்னுக மாறிப் பிறழ்ந்து செல்லும். எனவே இந்த இராகத்தைப் '**பிறழ்ச்சிப் பண்**' எனல் தகும். பிறழ்தல்=முறை அல்லது நிரல் மாறியமைதல். எ. டு: ஆனந்த பைரவி: சகரிகமப தபச்—சநிதபமகரிச (கொட்டை எழுத்துக் கோவை நிறை வகைக்கோவை). இதன் ஏறுநிரலில் 'சகரி' என்று பிறழ்ந்து இசைப்பதால் (வக்ரமாகி சப்திப்பதால்) பிறழ்ச்சிப்பண்ணின் இயல்பை அந்த இடத்தில் ஏறு நிரலில் மட்டும் பெறுகி றது. 'பதபச்' என்று இசைப்பதில் பதநிச் என்றிசைக்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

காமையால் — 'த,நி' ஒருவியமையால் — இது ஒருவிய இயல்பு பெற்றது. எனவே ஒரே பண்ணில் பிறழ்ச்சி இயல்பும் ஒருவிய இயல்பும் இணைந்து காணப்படலாம். இவ்விரு இயல்புகளை அடிப்படையாய்க் கொண்டு திறங்களை உறழப் (=பெருக்கப்) பலவகை கிட்டும். ('உறழ்ப்பு' —பஞ்சமரபு. (1975) ப. 44)

4. பொருந்து இசைக் கோவை இயல்

52. வாதி சம்வாதி முதலியவை பற்றிய இலக்கணம் வடமொழி இசையியலில் வேறு; தமிழிசையியலில் வேறு. ஆகையால் இரண்டையும் இணைத்துக் காட்டுதல் பொருந்தாது. பல நூல்கள் இணைத்துக் காட்டி இசையிலக்கணத்தில் குளப்பம் விளைவித்துள்ளன. தமிழிசையில் கோவைகள் ஒத்து ஒலிப்பதை—'**இசை புணர் குறிநிலை** என்றார் இளங்கோவடிகள் (சிலப். *8 :* 33, *34*) குறித்த கோவைகள் பொருந்தி இசைந்து ஒத்து ஒலிப்பதால்' **பொருந்து இசைக் கோவை** என்ற பெய்ரை இளங்கோவடிகளின் சொல்வழி இடுவது இனியதே. மு. ஆபிரகாம் பண்டிதர், தம் நூல்—கருணாமிர்த சாகரத்தில் பொருந்து இசை நரம்புகளை விளக்கியதே ஏற்றற் குரியதாகையால் அவ்விளக்கமே இங்கு தரப்பட்டுள்ளது.

53. இணை நரம்பு:

1	2	3	**4**	5	6	7	8	9	10	11	*12*	1
ச	ரி	ரி	க	க	ம	ம	ப	த	த	நி	நி	ச

இவ்வரிசையில் 'ச' வுக்கு எட்டாம் வீட்டில் நிற்கும் 'ப' இணை நரம்பு.

இவற்றுள் 'ச' நின்ற கோவை; 'ப' எய்திய கோவை. எந்த ஒரு கோவைக்கும் அதனுடைய எட்டாம் வீட்டுக் கோவை — இணை கோவையாகும். ச, ப; ப — ரி; ரி — த; த — க, க — நி, நி—ம என ஒன்றை ஒன்று தொடர்ந்து இணை கோவைகள், கல்யாணிப் பண்ணில் அமைந்து இடப்பது மிகமிக அரிய அமைப்பு.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இணையாகக் கோவைகள் பொருந்துவதை (1) இணை வழி ஆய்தல் என்றும் (2) இணைகொள்ளல் என்றும், (3) குரல்வாய் இளிவாய்க் கேட்டல் என்றும், (4) இணை நரம்பு அணைவுறக் கொள்ளல் என்றும், (5) குரல் இளிக் கிழமை கொளல் என்றும், (6) பட்டடை பண்ணல் என்றும், (7) குரல் இளிக் கிழமை கொளல் என்றும் பண்டை இசை இலக்கண நூல்கள் குறித்துள்ளன. இத் துணை சொற்செல்வம் இருப்பினும் இசைக்கல்லூரிகளில் இன்று 'சட்ஜம பஞ்சம பாவம்' என்பதே பெரும் வழக்கு. நூல்களிலும் 'பாவம்' என்பதே பெரும் வழக்கு.

54. பொருந்து கிளைக் கோவை:

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	ச்
ச	ரி	ரி	க	க	ம	ம	ப	த	த	நி	நி	ச

நின்ற கோவை 'ச' எனில், எய்து கோவை 'ம' ஆக வருவது; அதாவது ஆறும் வீட்டுக்கோவை கிளைக் கோவையாகும். ச—ம; ம—நி; நி—க; க—த; த—ரி எனக்கிளைக் கோவைகளாகத் தொடர்ந்து தோடிப்பண் அமைவதைக் கண்டு களிக்கலாம். இக்கோவைகள் யாவும் இறங்கிய வகையாகும். இதனைச் 'சட்ஜம மத்திம பாவம்' என்று குறிப்பது இன்றையக் கல்லூரி வழக்கு.

55. பொருந்து நட்புக் கோவை:

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	
ச	ரி	ரி	க	க	ம	ம	ப	த	த	நி	நி	ச

நின்ற கோவை 'ச' எனில் எய்து கோவை 'க' ஆகும். அதாவது நின்ற கோவைக்கு ஐந்தாம் வீட்டுக் கோவை —நட்புக் கோவை ஆகும்.

56. பகைக் கோவைகள் : ஒன்றுக்கு, 2,3,4,7, ஆகிய வீட்டுக் கோவைகள் பகைக் கோவைகள் ஆகும் என்றனர். இவற்றை ஆங்கிலத் தொடர்களால் அறியலாம். இணை-ஐந்தன் முறை (The fourths), நட்பு-(1 – 5) = மூன்றன் பெரும்முறை (The major third chord), (1 – 4) = மூன்றன் சிறு முறை (The minor third chord) என்று பெயர் பெறுகின்றன.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நட்பு நரம்பை ஆங்கில முறையில் இரண்டாகப் பகுத்துள்ளமை அறிக.

"இணை, கிளை, பகை நட்பு என்றஇந் நான்கில்
இசைபுணர் குறிநிலை எய்த நோக்கி"
—சிலப். 8 : 33, 34

5. பண்ணின் சில இயல்புகள்

57. **கிரக சம்பூர்ண ராகம்:** ஏறு நிரலிலும் இறங்கு நிரலிலும் கோவைகள் பிறழ்ச்சியின்றியும் நீக்கமின்றியும் நேரியவாய் அமையப் பெற்ற பண்ணை **'நேரிய கதிப் பண்'** என்க. இவ்வகை கோவைச் செலவைச் 'சரள கதி' என்றும் கூறுவதுண்டு. இனி அரிகாம்போதியை 'நேரிய கதிப் பெரும் பண்' எனலாம். மோகனத்தை **'நேரிய கதிக் ஒருஉப் பண்'** எனலாம்.

58. **பாஷாங்க ராகம்:** ஏறு நிரலில் அல்லது இறங்கு நிரலில், அல்லது. இரண்டிலும் பண்ணுக்கு உரித்தல்லா தவேறு கோவை இசைக்குமாயின், அது **இடைப் பிறவரல் பண்** எனப்படும். எ டு:- பைரவியில் ஏறு நிரலில் முகாரியில் இறங்கு நிரலில், கிழமை (உரிமை)யல்லாக் கோவை ஒலிக்கின்றது. (இந்நூல் எண் 25 காண்க).

59. **உபாங்க ராகம்:** இடைப் பிறவரல் கோவை (அந்நிய ஸ்வரம்) ஒலிக்காமல், ஒரு பண்ணிற்கே உரிய கோவைகள் மட்டுமே ஒலிக்குமாயின், அப்பண்ணை **உரிமைக் கோவைப் பண்** அல்லது **கிழமைக் கோவைப் பண்** எனலாம். (எண் 26 காண்க).

60. **முக்தாங்க ராகம்:** ஒரு பண்ணில் எல்லாக் கோவைகளும் உள்ளோசையோடு (கமகம்) ஒலித்தால் அப்பண்ணை, அனைத்து உள்ளோசைப் பண் என்க. இதனை வடமொழியில் 'சர்வ ஸ்வர ரக்தி ராகா' என்றும் சொல்லுவர். எ-டு:- சுத்த சாவேரி.

61. **அர்த்த கம்பித ராகங்கள்:** ஒரு பண்ணில் சில கோவைகளே உள்ளோசையுடன் (கமகத்துடன்) இசைத்த தென்

ஞல், அப்பண்ணனது **சிற்கோவை உள்ளோசைப் பண்** எனப் பெயர் பெறும்.

62. சமன் கிரக ராகம்: மோகனப் பண்ணில், 'சரிகப தச்—ச்தபகரிச' என்று ஏறுநிரலின் கோவைகளே, இறங்கு நிரலிலும் சமமாக அமைந்துள்ளதால், இப்பண்ணை **'சம நிரல் பண்'** என்க. இனி, முன்னர்ப் பாகத்திலோ, பின்னர்ப் பாகத்திலோ மட்டும் கோவைகள் சம நிரலாக அமைவதுமுண்டு.

63. சர்வ ஸ்வர மூர்ச்சனுகார ராகம்: ஓர் எடுத்துக் காட்டால் விளக்குவோம். சுத்த சாவேரி-சர்வ ஸ்வர மூர்ச்சனு கார ராகம். இதன் நிரல்கள்:— சரி மபதச் — ச்தபம ரிச. 'ரி' முதல் 'ரி' வரை மாறுமுதல் பண்ணினல் அதாவது 'ரி' யைக் குரல் குரலாகப் பண்ணினல் உதய ரவிச் சந்திராப் பண் கிட்டுகிறது. இதனை 'ரி' மூர்ச்சனைப் பண் என்பர். இவ்வாறே "ம, ப, த" எனும் மூன்று கோவைகளிலும் மாறுமுதல் பண்ணினல் மூன்று பண்கள் கிடைக்கும்:— 'ம' மாறுமுதலில் — மோகனம்; 'ப' — மாறுமுதலில் — மத்ய மாவதி; 'த' — மாறுமுதலில் — மால் கூசு. எனவே சுத்த சாவேரிப் பண், **'அனைத்துக் கோவை மாறுமுதற் பண்'** எனலாம். ஒருஉப் பண்களை இரு வகையில் மாறுமுதல் பண்ணலாம். இந்தச் சுருக்க நூலில் விளக்க இடமில்லை. 'மோகனத்தின் பஞ்சம மூர்ச்சனையே சுத்த சாவேரி' என்னும் தொடரை 'மோகனத்தின் பஞ்சமப் பண்ணுப் பெயர்ப்பே — 'சுத்த சாவேரி' எனலாம். அல்வது முல்லைப் பண்ணின் இளிப் பண்ணுப் பெயர்ப்பே 'சுத்த சாவேரி' எனலாம்.

6. ஆளத்தி இயல்

64. ஆளத்திக் குரிய சொல்கள்: ஆளத்தி, ஆலாபனை, ஆலாபனம், வக்கிரித் திட்டம், பண்ணீர்மை முதலியன ஒரு பொருட் பல பெயர்கள்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

65. **ஆளத்தி – சொற்பொருள் விளக்கம்:** அகளம் + அத்தி > அகளத்தி > ஆளத்தி. அகளம் = அகலம்; 'அத்தி' என்பது சொல்லின் கடைநிலை. இனி வேறு:– அகல் + அத்தி = அகலத்தி > ஆலாத்தி ஆளாத்தி என்பது – ஒரு பண்ணை **விரி** வாகத் (அகலமாகத்) தாளக் கட்டுக்குட்படாது பாடுவது.

66. **ஆளத்தி பாடுதலின் இயல்புகள்: 1 தொடக்கம்** – பண்ணைச் சிறப்புக் கோவையில் தொடங்கல். இதற்கு வடசொல் – "ஆட்சிப்திகா". **2 விருத்தி** – படிப்படியாகப் பண்ணை விரிவாக்கி வளர்க்கும் நெறி முறைகள். இதற்கு வடசொல் – "இராக வர்த்தினி" **3 முடிவு** – பண்ணைப்பாடி முடிதற்குரிய பகுதி. இதற்கு வடசொல் – "மகரிணி" 67 **மண்டிலங்களில் இசைத்தல்** – மெலிவு, சமன், வலிவு ஆகிய மண்டிலங்களில் நின்று இசைத்தல். இதற்கு வடசொல் – "ஸ்தாயி சஞ்சாரம்". **5 நிறம் தோற்றுவித்தல்** – பண்ணிற்கு உரிய உணர்வு, சுவை, முதலிய தோன்றப் பாடுதல். **6 வந்தது வளர்த்தல்** – என்றது மனதிற்கு வந்த கற்பனை அமைப்பை வளர்த்தல்; அமைந்து வந்துள்ளதை வளர்த்தல் என்றும் பொருள்படும். சரக்கு வைத்துப் பாடுதல் என்பதை **வளர்த்தல்** என்றே **விருத்தி** என்றே சொல்லுதல் வேண்டும். இக்காலத்தார் "சங்கதி போட்டுப் பாடுதல்" என்று பொருளோடு பொருந்தாத கொச்சைத் தொடரால் சொல்லுவார்கள்.

7. **நிரம்ப நிறுத்தல்** – சில உயிர்ப்பான கோவைகளை நின்று இசைத்தல் வேண்டும்; அக்கோவையைச் சுற்றி ஆரோசை, அமரோசை செய்து வந்து நிறுத்தல் வேண்டும்.

8. **இரட்டிக் கிரட்டி சேர்த்தல்** :– ஒரு பாடல் காலத்தில் ஒரு எண்ணிக்கைக்கு எத்தனை கோவையோ, அவைபோல் இருமடங்கு கோவைகளை, அடுத்த காலத்தில் இரட்டிப் பாக்கிப் பாடுதல். இதுவே "வாரம் பாடுதல்" எனப்படும்.

(சிலப் 3 : 45 உரை

9. **குரல்இளி ஒப்பப் புணர்த்தல்** (சிலப் 3 : 59,60) கோவைத் தொகைகளின் முதலும் முடிவும் பொருந்தும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இசைக் கோவைகளாக அமைத்தல். இணை, கிளை, நட்பு, முறையில் அமைத்தல். 10 சித்திரப் புணர்ப்பு என்றது நிரவல் பாடுதல். (சிலப். 3:55) பாடல் எழுத்துக்களின் மேல் பண்ணீர்மை ஏற்றிப் பாடல் எனச் சிலம்பின் உரை விளக்கும்.

இவை போன்ற ஆளத்தி பாடும் இயல்புகள் சிலம்புக் காலத்திற்கும், 2000 ஆண்டுகட்கும் முன் இருந்தே வருகின்றன. இந்த இலக்கணங்களையே பிற் காலத்தார் வட சொல் களில் கூறிக் கொண்டனர். பிற்கால இசை நூல்களுக்குச் சிலம்பே அடிப்படை. இசை மரபு தொடர்ந்து வருகிறது; வடமொழிச் சொல்களின் வீண் வம்புப் பிடிகளிலிருந்து மீட்புப் பெறுதல் இன்றியமையாதது.

7. தாள உறுப்பு இயல்

67. தாளச் சிறப்பு : தென்னக இசையில் தாள வகைகளும்—கொட்டு முழக்கு வகைகளும் எண்ணற்றுப் பரந்து விரிந்து கிடக்கின்றன. உலகில் எந் நாட்டிலும் காணாத புது வகைக் கொட்டு முழக்குகள் நுண்ணிய காலக்கணக்குகளில் சிறப்பாய் விளங்குகின்றன. உலகு கற்றுக் கொள்ளற்கு உரியன.

"இசைஎனும் இனிய சேயர்க்குத்
தாளமே தனிப்பெரும் தந்தை
ஆளும் கோவையே அன்னை"

—வீ. பகாசு.

68. தாளம் என்பது என்ன? தாளம் என்பது பாட்டினது வரியின் கால நீளத்தை அளந்து நிறுத்தும் பகுப்புடைய எண்ணிக்கைக் கோவையாகும். அதற்கு எண்ணிக்கையும், இயக்கும் செயல்முறையும் பகுத்த பாகுபாடாகிய உறுப்புகளும் உண்டு.

69. தாளம் எனும் சொற்குப் பொருள் :

ஆதி மாந்தன் கூடி மகிழ்ந்து குதித்து ஆடிய போது —தாள் (பாதம்) தரையில் பட்டு ஒலிக்கத் தாளம் தோன்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

றியது. தாள்+அம்=தாளம். இச்சொல்லுக்குப் புராணக் கற்பனைக் கதை விளக்கங்களும் உண்டு. பாணி என்பது கையால் எண்ணிப் போடுவது என்று பொருள் படு வது. பாணி=கை; கையால் கொட்டும் தட்டுகள். (ஒப்பு:- சப்பாணிப் பருவம் பிள்ளைத் தமிழில்).

70. தாள நூல்கள்:- சிலப்பதிகாரத்தில் சீரிய நல்ல பலப்பல தாளக் குறிப்புகள் உண்டு; நிகண்டுகளில் தாள வகைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றினடியாகப் பிற் காலத்தில் தாள நூல்கள் பலப்பல வடமொழி கலந்து தோன்றின. சொல்களை எல்லாம் வட மொழிச் சொல்க ளால் நிரப்பிக்கொண்டனர். தாளநூல்கள் தாளங்களை 35 என்றும், 108 என்றும், அதற்கு மேலும் என்றும் பகுத்து வகுத்துத் தருகின்றன. பெரும்பாலான பாகுபாடுகள் பகுப்பு நெறிமுறையில் அமையவில்லை.

71 தாள உறுப்புகள்: (1) அலகு, (2) துரிதம் (3) அரைத் துரிதம் / (4) குரு, (5)புல்லிதம், (6) புள்ளடி என்னும் ஆறும் சிறப்பின.

72. "அலகு" சொற்பொருள்:— 'அலகு' என்பது 'லகு' என்று திரிந்தது. நாலு எண்ணிக்கை உடைய பகுப்பாக முதலில் தோன்றியது. பின்னர் பலவாறு பெரிகி வளர்ந்து வகைகள் கொண்டது.

'அல' என்னும் வேர்ச் சொல்லினின்றும் பிறந்தது 'அலகு' என்பது. அல—த்தல்=அங்கும் இங்கும் திரிதல். (அல+ஐ= அலை. அல+கை=அலகை. அல+த்+த்+அல்=அலத்தல். அல+ங்+கு=அலங்கு. அல+க்+கு= அலக்கு முதலிய சொல்கள் ஒப்புக் காணற் குரியன). அல—த்தல்= (1) அங்கும் மிங்கும் திரிதல் (2)அகன்று அமைத்தல். தாளத் தின அலகு என்பது இரண்டு எண்ணிக்கைக்கும் மேற் பட்டு அகன்று அமைவதால் அகன்றது எனும் பொருளில் 'அலகு' எனப் பெயர் பெற்றது. (பிற ஒப்புப் பொருண் மைகளைக் காண்க :- அகலமாய் அமைந்த காரணத்தால் (1) நூற்பாவை ஒழுங்கு படுத்தும் தடிக்கும், (2) துடப்பத்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

திற்கும் (3) தாடைக்கும்—அலகு என்ற தன்மைக் காரணப் பெயர் அமைந்தது. தாள அலகு என்பது இரண்டு எண்ணிக்கைக்கும் மேற்பட்ட எண்ணிக்கை அளவுடையது என்று பொருள்படுவது.

73. அலகு வகை

	வட சொல்	எளிய சொல்	பண்டைச்சொல்
1.	திஸ்ர லகு	— மும்மை அலகு	— சிந்து அலகு
2.	சதுஸ்ர லகு	— நான்மை அலகு	— அளவு அலகு
3.	கண்ட லகு	— ஐம்மை அலகு	— நெடில் அலகு
4.	மிஸ்ர லகு	— எழுமை அலகு	— ஏழ் நெடில் அலகு
5.	சங்கீரணலகு	— ஒன்பான்மை அலகு	— ஒன்பான் நெடில் அலகு

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னிருந்தே செய்யுளின் அடி நீளங்களை—குறளடி, சிந்தடி அளவடி, (நேரடி), நெடிலடி, கழிநெடிலடி என அளந்து சொல்லும் முறை இருந்து வருகின்றது. கழி நெடில் அலகினை—அறுமைக் கழி நெடில் அலகு என்றும், எழுமைக் கழி நெடில் அலகு என்றும் ஒன்பான்மைக் கழி நெடில் அலகு என்றும் வகுக்கலாம்.

74. துரிதம்: தாளத்தின் ஓர் உறுப்பு. இரண்டு எண்ணிக்கை உடையது. ஒரு தட்டும் ஒரு வீச்சும் எனச் செயல் படுத்தப் படுவது. இதன் குறி- ஒருசுழியம் அல்லது வட்டம். இதுவே தாளங்களின் அடிப்படை அளவு. இதன் பாதி அளவை, அதாவது ஓர் எண்ணிக்கையை அரைத்துரிதம் என்றனர். எனவே துரிதமே (இரண்டு எண்ணிக்கையே) தாளங்களின் அடிப்படை அமைப்பு. துரிதத்திலும் அகலமாய் அமைவது அலகு. பாதியாய் அமைவது அரைத் துரிதம் அல்லது அநுதுரிதம் (அநுத்ருதம்) துரிதம், அரைத்துரிதம் ஆகிய இரண்டின் பெருக்கமும் கூட்டலுமே பிற எண்கள். (எ—டு:— $2 \times 3 = 6$; $2 \times 3 + 1 = 7$ இவை போல் கொள்க.)

75. துரிதம் என்னும் சொல்லும் பொருளும்: துரிதம் (த்ருதம்) என்னும் சொல்லுக்குப் பொருள்—விரைவு; சீக்கிரம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

(''துரிதமான் றேரில் போனான்''- இராமா. தைலமாட்டு.54)
(துரிதம் பண்ணு=விரைவு செய். துரிதம் போடு=நாட்டியத்தில் விரைவாய் ஆடு) துரிதம் என்பதன் வேர்ச் சொல் எது? அவ்வேர்ச் சொல் வழியாய்ப் பொருள் என்ன?
துர்+இதம்=துரிதம். 'துர்'— என்பது விரைவு சுட்டும் வேர்ச்சொல்; 'இதம்'—என்பது தன்மை சுட்டும் சொல்லிறுதி நிலை ('துர்' என்னும் வேர்ச் சொல்வழிப் பிறக்கும் பிற சொல்கள்:— துர்+ஐ=துரை=துரத்துபவன். துர்+அத்து=துரத்து=விரட்டு, விரைவில் செல்லச் செய். துர்+அகம்=துரகம்=விரைந்துசெல்லும் குதிரை.)

இரு எண்ணிக்கை அடியைக் குறளடி என்றும் இரு எண்ணிக்கைச் சீரினைக் குறள்சீர் என்றும் தொல்காப்பியர் காலத்திலிருந்து குறித்து வருவது ஒப்பு நோக்கற்குரியது. ஒரு சீர்த் தூக்கினைச் செந்தூக்கு என்றும், இரு சீர் தூக்கினை மதலைத் தூக்கு என்றும், சிலம்புக் காலத்திற்கு முன்னரே கூறினர். (சிலப். 3:16. அடியா) (செந்தமிழ்ச் செல்வி. நவம். 1980. ப. 135, இல் என் கட்டுரையில் விரிவாய்க் காண்க).

76. **உறுப்புகளின் கால அளவுகள்:**

அலகின் பெருக்கம்

அலகு.	எண்ணிக்கை	=	4
2 அலகு = 1 குரு	,,	=	8
3 அலகு = 1 புலிதம்	,,	=	12
4 அலகு = 1 புள்ளடி	,,	=	16

77. **அலகின் சுருக்கம்**

பாதி அலகு = 1 துரிதம்.	எண்ணிக்கை	= 2
கால் அலகு = 1 அரைத்துரிதம்	,,	= 1

78 **ஒன்றின் அல்லது அரைத்துரிதத்தின் சுருக்க அளவுகள்**

1 நாற்பாக்கம் (சதுர்ப்பாகம்)	=	$\frac{1}{4}$	எண்ணிக்கை
2 நாற்பாக்கம் (,,)	=	$\frac{1}{2}$	,,
3 நாற்பாக்கம் (,,)	=	$\frac{3}{4}$	,,

$\frac{1}{4}$ எண்ணிக்கையை நிமிட்டல், இமைத்தல், நொடித்தல் என்பன வற்றால் குறித்தனர்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே
கண்ணிமை கைநொடி அளவே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே

பஞ்சமரபு தாள. 177

(பண்டைக் காலத்தில் 'மாத்திரை' எனும் சொல்லை நுண் காலப் பகுப்புக்கே குறித்துக் கூறிவந்தனர். பிற்காலப் பொருள் பொருந்தாத பிழைப்பட்டது.)

79. தாளத் தசப் பிரமாணம் :– தாளத்திற்குப் 'பத்து நெறிமுறைகள்' உண்டு என்றனர். அவை :– (1) காலம் (2) மார்க்கம். (3) கிரியை. (4) அங்கம். (5) கிரகம் (6) சாதி (7) கலை (8) லயம் (9) யதி (10) பிரத்தாரம். இனி, இவற்றிற் குரிய தமிழ்ச் சொல்லை முறையே காண்போம்.

80. காலம் :– துரிதம், அலகு முதலிய உறுப்புகளின் எண்ணிக்கையின் அளவு ஆகிய காலம்.

81 மார்க்கம் :– இசைச் சொல்கள், எவ்வாறு தாளத்து வழியில் செல்லுகின்றன என்று குறிப்பதே மார்க்கம், கோவைகள் — ஒரு தாள எண்ணிக்கையுள், ஒன்று. இரண்டு, மூன்று. நான்கு முதலிய எண்ணிக்கையில் அடங்கி நடந்து செல்லும் செலவு என மார்க்கத்தைக் குறிக்கலாம்.

82.கிரியை :– தாளத்தைக்கையில் கணக்கிட்டுச் செயல் படுத்தும் போது மூன்று வகைச் செயல்கள் நடைபெறு கின்றன. (1) அரைத் துரிதத்திற்குத் தட்டுதல்; அதன் குறியீடு — அரைவட்டம். (2) துரிதத்திற்குத் தட்டுதலும் கையை வீசுதலும்; அவற்றின் குறியீடு — வட்டமதி (3) அலகுக்குத் தட்டுதலும் விரல்களால் எண்ணுதலும்; அவற்றின் குறியீடு — ஒரு செங்குத்துக்கோடு. இவை ஒவ் வொன்றிற்கும் இடைவெளி அளவுகள் உண்டு. கையை வீசுதலும் பலவகைப்படும்.

கொட்டும் அசையும் தூக்கும் அளவும்
ஒட்டப் புணர்ப்பது பாணியாகும்

— சிலப்பதிகாரம் அடியா.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இங்குக் குறித்த நால்வகைச் செயல்களுக்கும் சிலப்பதிகார உரையில் குறியீடுகளும் கால அளவுகளும் குறிக்கப் பட்டுள்ளன. கிரியை = செயல்.

83. **அங்கம்** :— மேலே கூறிய துரிதம், அலகு முதலிய உறுப்புகள். சடாங்கம் = ஆறு உறுப்புகள். இவற்றை இரண்டாகப் பகுத்தல் வேண்டும். (அ) ஒன்றுக்கு மேற்பட்டவை. (ஆ) ஒன்றன் நுண்பகுப்புகள் :— $\frac{1}{2}$, $\frac{1}{4}$, 1/8, 1/16 என்பன. பண்டைக் காலத்துப் பத்து உறுப்புகள் கொண்டனர்.

84. **கிரகம்** :— தாளத்தின் ஓர் இடத்தில் பாட்டைத் தொடங்குவது எடுப்பு எனப்படும். 85. (அ) தாளமும் பாட்டும் சமமாகத் தொடங்குவது — சமஎடுப்பு (சமகிரகம்).

86. (ஆ) தாளத்தின் பின் $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, $1\frac{1}{2}$, முதலிய இடங்களில் பாட்டுத் தொடங்வது பிந்திய எடுப்பு (அனுகத கிரகம்)

87. (இ) தாளத் தொடக்கத்திற்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, $1\frac{1}{2}$, முதலிய இடத்தில் பாட்டை முந்தி எடுப்பது முந்திய எடுப்பு (அதீத கிரகம்) ஒரு களைக்கு $\frac{1}{4}$ இடம் வேறு; இரு களைக்கு $\frac{1}{4}$ இடம் வேறு. இதனை மாணவர்க்குத் தெளிவூட்டல் முக்கியம்.

88. **சாதி:** அலகுக்கு — மும்மை அலகு, நான்மை அலகு, ஐம்மை அலகு, எழுமை அலகு, ஒன்பான்மை அலகு என்று அலகு வகை பெறுகின்றன. மேலும் பகுப்புகளும் வேறு வகையில் அமையலாம். தகிட தகதின — 3 + 4 = 7 என்றவகையில் 7 அமையலாம். தகதின தகிட — 4 + 3 = 7 என்ற வகையிலும் அமையலாம். இந்த நடையிலும் பாட்டுகள் அமைப்பதுண்டு.

89. களை : ஓர் எண்ணிக்கைக்குள் எத்தனை தொகுப்பு எழுத்துகள் கொண்டு பாடல் நடை போடுகிறது என்பதே 'களை' எனப்படும் ஒரு களைச் சவுக்கம் — என்பது ஒருகளைச் சதுரம் என்று பொருள்படும். சவுக்கம் = சதுரம். ஒரு எண்ணிக்கைக்கு 'தகதின' எனும் நான்கு எழுத்தின் கால அளவு கொள்வதை 'நான்மை ஒருகளை' எனலாம். ஓர் எண்ணிக்கைக்கு 'தகதின தகதின' என இருமுறையின் எட்டு எழுத்துக் கால அளவைகள் நான்மை இருகளை (இரு

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

களைச் சவுக்கம்) எனல் பொருந்தும். இனி, மும்மை ஒரு களை, மும்மை இருகளை போன்ற அமைவுகளையும் கொள்க. ஏக களை = ஒருகளை; துவிகளை = இருகளை; சதுஸ்களை = நாலுகளை.

90. **லயம் :** லயம் என்பதன் பொருள்—பொருந்தி ஒன்றி விடும் தன்மை. நடைவேறு. லயம் வேறு. பாட்டுடன், பொருளுடன், பாட்டுச் சொல்லமைப்புக் காலக் கணக்குடன் கொட்டு முழக்கு பொருந்தி ஒன்றுவதே லயம் எனப்படும். லயத்தல் = இணைந்து ஒன்றுதல். பாட்டின் சொற்றொடர்கள் எந்தக் காலப் பகுப்பு முறையில் செல்லுகின்றனவோ – அவற்றோடு பொருந்திக் கொட்டு முழக்கும் அமைதல்வேண்டும். இதனைப் பண்டைத் தமிழிசையாளர்கள் ஒறுத்தல் என்னும் ஏற்ற இனிய சொல்லால் குறித்தனர். பாட்டின் சொல்லமைப்புக்குத் தாளச் சொல்கட்டு ஒத்து, வரையறுத்துச் செல்லுவதே ஒத்தறுத்தல் எனப்படும்.

முதல்நடை, வாரம், கூடை, திரள் முதலிய நடையில் சொற்றொடர் அமைந்திருப்பின் அவற்றிற் கேற்பப் பொருந்தியும், $\frac{3}{4}+\frac{3}{4}+\frac{1}{2}=2$; $\frac{3}{4}+1\frac{1}{4}=2$; $\frac{1}{4}+1\frac{3}{4}-2$; முதலிய காலப்பகுப்புகட்கு ஏற்பப் பொருந்தியும் கொட்டு முழக்கு அமைவதே ஒத்து அறுத்துச் செல்லல் எனப் பட்டது.

8. முழக்குக் கோல இயல்

யதி : கொட்டு முழக்குகளின் வடிவத்தை யதி என்றனர்; ஆகையால் அதனைக் கொட்டு முழக்குக் கோலம் எனலாம். ஒலியால் கோலம் போடுவதே யதி. யதிவகைப் பெயர் எல்லாம் கடினமான வட சொல்கள்; எளிய தமிழ்ச் சொல்களால் சுட்டலாம். அனைத்து யதிகட்கும் இசைக் கருவிகளின் வடிவ அடிப்படையில் பெயரிடுதல் நேரியதும் சீரியதும் ஆகும். யதி என்பதற்கு வெ∴ப்பரீசியசு அகராதி இசையின் காலம் எனப் பொருள் உரைத்துள்ளது. இப்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பொருளுடைய 'யதி' என்னும் பெயரிலும் முழக்கத்தின் ஒலிக்கோலம் எனும் சொல் பொருள் பொதிந்தது; பொருள் பொருந்தியது.

92. **பிபீலக யதி:** (எறும்பு யதி) (சம யதி):- துவக்க முதல் முடிவுவரை ஒரே அளவில் சொற்கள் ஒலிப்பதை, வடிவு நோக்கிப் '**புல்லாங்குழல் கோலம்**' எனலாம்.

	4		4		4		4
எ-டு:-	தகதின	|	தரிகிட	|	தகசணு	|	தகதிமி
	சா;	|	நீ;	|	தா;	|	பா;

93. **மிருதங்க யதி:** சொல்கள் துவக்கத்திலும் முடிவிலும் குறுகியும், நடுவிற்கு வரவரப் பெருகியும் வந்து அமைவது—'**மத்தளக் கோலம்**'.

	2	3	4	3	2
எ-டு :	தோம்	கிடதொம்	தகிடதொம்	கிடதொம்	தோம்
	நிச்	தநிச்	பதநிச்	தநிச்	நிச்

94 **வேத மத்தியம யதி:** (யதி தமரு) ஸ்ரோதோ வஹ யதி என மற்றோர் வட மொழிப் பெயரும் உண்டு. சொல்கள் துவக்கத்திலும் முடிவிலும் பெருகியும், நடுவே வரவரக் குறுகியும் அமைவது **உடுக்கைக்கோலம்.**

எ-டு: 4	3	2	3	4
தகிடதொம்	கிடதொம்	தோம்	கிடதொம்	தகிடதொம்
பதநிச்	தநிச்	நிச்	தநிச்	பதநிச்

95. கோபுச்ச யதி (பசுவால் யதி): சொல்கள் துவக்கத்தில் பெருகியும் வர வரக் குறுகியும் வந்து அமைவது **தவலை அல்லது தபேலா, அல்லது கிடுகட்டிக் கோலம்.** எ — டு:—

5	4	3	2
ததிகிடதொம்	தகிடதொம்	கிடதொம்	தோம்
சா;,	நீ;	தா,	பா.

96. **ஸ்ரோதோ வஹ யதி** (நதி யதி): சொல்கள் துவக்கத்தில் குறுகியும் வரவரப் பெருகியும் அமைவது **நாகசுரக் கோலம்** எ — டு:—

2	3	4	5
தோம்	கிடதொம்	தகிடதொம்	ததிகிடதொம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

குறிப்பு :—

1) விசம யதி என்பதில் சொல்கள் ஒரு ஒழுங்கின்றி ஒலிப்பதால், அதற்கு வடிவமோ அழகோ இன்மையால் அதனைக் கோலம் எனப் பகுப்பது பொருத்தமாகத் தெரிய வில்லை. (2) இந்தக் கோலங்கள் கலந்தும் இரட்டித்தும் வரலாம். முறை மாறிவருவது 'முறை பிறழ்ந்த கோலம்' எனப்படும் (3) சங்கச் செய்யுள் சொல்லமைப்பிலே அம் போதரங்க அமைப்பு என்பது குறைப்பு அமைப்பு ஆகும். அம்போ தரங்க அமைப்பை முரணியும் மாற்றியும், மாற்றி முரணியும் அமைக்கப் பல கோலங்கள் கிட்டும். இவை இன்று தமிழகத்தில் நடைமுறையில் உள்ளன.

9. முழக்குப் பரப்பு இயல்

97. **பிரத்தாரம்:** பிரத்தாரம் என்பது பரப்புதல். ஒரு நீண்ட சொற்கட்டைப் பலவாறு பகுத்துத் தொகுக்கலாம். எனவே பிரத்தாரம் என்பதற்குப் பகுத்துப் பரப்பல் எனல் பொருந்தும். இதன் வகைகள்:— 1. நஷ்டம், 2. உத்திஷ்டம் 3 பாதாளம், 4. மகா பாதாளம், 5. அநுதிருத மேரு 6. திருத மேரு, 7. த்ருத விராம மேரு, 8. லகு மேரு, 9. குரு மேரு 10. புலுத மேரு, 11. காகபாத மேரு, 12. சமயோக மேரு, 13. கண்டப் பிரத்தாரம், 14. யதிப் பிரத்தாரம்.

98. **நஷ்டப் பிரத்தாரம்:** எ-டு:—5 எண்ணிக்கையைக் குறைப்பு முறையில் இவ்வாறு பகுத்துப் பரப்பலாம்.
$4+1=5$; $3+2=5$; $3+1+1=5$; $2+2+1=5$; $2+1+1+1=5$. **குறைப்பு முறைப் பரப்பு**

99. **உத்திஷ்டப் பிரத்தாரம்:** நிறைப்பு வகைப் பரப்பு. எ-டு: — ஐந்தன் பரப்பு; $1+2+2=5$; $2+3=5$; $1+4=5$.

100. **பாதாளப் பிரத்தாரம்:** $\frac{1}{4}$ எண்ணிக்கையில் பரப்புதல். தக தகிட $=1\frac{1}{4}$. $1\frac{1}{4}+1\frac{1}{4}+1\frac{1}{4}\ 1\frac{1}{4}=5$. இதனைச் **'சிற்றளவுப் பரப்பு'** எனலாம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

101. **மகா பாதாளப் பிரத்தாரம்:** $\frac{1}{8}$, 1/16 எனும் எண்களில்— '**மிகநுண் அளவின்பரப்பு**' எ-டு:
தகதகிட $= 5/16; \; 5/16 \times 16 = 5.$

102. **அநுத்ருத மேரு:** எ-டு:- எழுமைச் சாய்ப்பு தாளத்தை ஒன்று ஒன்ருக ஏழுமுறை முழக்க 7 எண்ணிக்கையுள் பரப்பு கிட்டும். எனவே இதனை '**ஒன்றன் அடுக்கு**' - என்க.

103. **துருத சேகரம் மேரு** — என்பது — **மூன்றன் அடுக்கு** இவ்வாறே மேலும் 12 வரை கொள்க.

104. **கண்டப் பிரத்தாரம்:** பல எண்ணிக்கைத் தொகையினைச் சிறு பாகங்களாகப் பிரித்தல் வேண்டும். பின் அப்பாகங்களை முறைமாறி அமைக்கும் அமைப்பு—'**முறை மாற்றுப் பரப்பு**' எனல் வேண்டும். இது சீரிய முழக்கு முறை; தென்னகத் தமிழிசையின் சிறப்பு முறை. எ-டு= 12 எனும் எண்ணை = (அ) $(3 - 2.1/2 + 2 = 7.1/2) + (1.1/2 + 1.1/2 + 1.1/2 = 4.1/2) \; 7.1/2 + 4\frac{1}{2} = 12.$

இப்பகுப்பை முறை மாற்றியது:-

(ஆ) $(3+1.\,1/2) + (2.\,1/2+1.\,1/2) + (2+1.\,1/2) = 12$

(இ) $(1.\,1/2+3) + (1.\,1/2+2.\,1/2) + (1.\,1/2+2) = 12$

(உ) $(1.\,1/2 + 1.\,1/2 + 1.\,1/2) + (2+2.\,1/2+3) = 12$

(ஊ) $(2+1.\,1/2) + (2.\,1/2+1.\,1/2) + (3+1.\,1/2) = 12$

கண்டப் பிரத்தாரம் அல்லது முறை மாற்றுப் பரப்பு இது காறும் ஒரு நூலிலும் இவ்வாறு கணித்து விளக்கப் படவில்லை. எனவே இதனை விளங்கிப் பெரிதும் நடைமுறைக்குக் கொணர்ந்து மகிழலாம்.

சொல் கட்டும் அளவும்

$1\frac{3}{4}$ $1\frac{1}{4}$

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தா தீ தசாம் — தக தகிட = 3
தீ தசாம் — தக தகிட = 2 1/2 } 7 1/2
தசாம் — தக தகிட = 2

ததீம் கிணதொம் = 1 1/2
ததீம் கிணதொம் = 1 1/2 } 4 1/2
ததீம் கிணதொம் = 1 1/2

12

105. **யதிப் பிரத்தாரம்:** முன்னரே விளக்கப்பட்ட இசைஒலிக் கோலங்கள். கோலங்களை முறை மாற்றுவதால் பலவகைப் பகுப்புப் பரப்புவகைகள் கிடைக்கும். இவை தென்னக இசை யின் உயிராய தனிப் பெரும் சிறப்பு முறைக்கு வகைகள்.

106. **கதி பேதம் செய்தல்:** ஓர் எடுத்துக் காட்டால் விளக் கல் நல்லது. தகதின என நான்மை நடை ஒலிக்கும் காலப் பகுதியினையே மூன்று சமபாகமாகப் பிரித்து ஒலித்தல்.

1	2	3	4
த க தி ன	த க தி ன	த க தி ன	த க தி ன = 16
த கி ட	த கி ட	த கி ட	த கி ட = 12

16 எழுத்துக்கள் ஒலித்த இடத்திற்குள், 12 எழுத்துக்கள் சமமாகப் பிரித்து ஒலிக்கச் செய்தலை **மும்மைக்கதி மாற்றம்** எனல் வேண்டும்.

107. **கதியுள்கதி நடை:** இனி, மும்மைச் சொற்கட்டை மும்மைக் கதிமாற்றத்தில் முழக்குதல் கண்டோம். ஐம் மைச் சொல்லையும் இனி ஐம்மைச் சொற்கட்டை (த தி கி ட தம்) மும்மைக் கதியியில் முழக்கலாம்.

1	2	3	4
த கி ட	த கி ட	த கி ட	த கி ட = 3 × 4 = 12
த க – த	தி கி ட	தம் - ததி	கிட தம் — 2 + 5 + 5 — 12

இனி நான்மை நடையிலிருந்து — மும்மைக் கதிமாற் றம் செய்தது போன்று பிற ஐம்மை முதலிய கதிமாற்ற மும் செய்யலாம்.

108. **அறுதி:—** கொட்டு முழக்கில், ஒருபாட்டின் இறுதியில் இறுதிப் பகுதியாயிற்று எனக்காட்ட, முழக்கும் பகுதியே

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அறுதி. எ-டு :— தகதிட கிடதோம் — என்னும் இரண்டு எண்ணிக்கை நடையின் இறுதியில் கிடதொம் + கிடதொம் + கிட $(\frac{3}{4}+\frac{3}{4}+\frac{1}{2})$ என்னும் வகையில் அமைக்கலாம். அறுதியை மத்தனச் சொல் ஒலி வேற்றுமையாலும் காட்டலாம்.

அறுதி = கடைசி.

109. **தீர்மானம்:**— பல்லவி, துணைப்பல்லவி, சரணம் முதலிய உறுப்புகளை விரித்தி (சங்கதி) அமைத்து பாடுபவர் முடித்து விட்டார், எனக்காட்டுவது தீர்மானம். (ஒரு தாள வட்டணையில் (ஆவர்த்தத்தில்), 1/2, $\frac{3}{4}$, முழுப் பகுதிகளில் அமைவது சிறப்பு. தீர்ந்த அளவு உடையது —தீர்மானம். முப்பகுப்பு உடையது. எ—டு:—

1.	தகதிமி தகதின — தோம்;	2 + 1 = 3	தோம்
2.	தகதிமி தகதின — தோம்;	2 + 1 = 3	
3.	தகதிமி தகதின — ( )	2 + = 2	
		8	

110. **முத்தாய்ப்பு** — பாட்டு அல்லது தனிமுழக்கு வகைகள் முற்றிலும் முடிந்த போது அமைவதே முத்தாய்ப்பு. இது பெரும்பாலும் ஒரு வட்டணைக் குள்ளும் (ஆவர்த்தத்திற்கு உள்ளும்) அதற்கு மேலும் அமையும். இது முப்பகுப்புடையது. இறுதி 'தோம்' வட்டணைப் புறத்தே விழுதல் வேண்டும். **அடுக்கு முத்தாய்ப்பு** சில முத்தாய்ப்புகளில் இரண்டு மூன்று முறை முப்பகுப்புகளும் அடுக்கி வருவதும் உண்டு.

எ—டு:— 12 எண்ணில் முத்தாய்ப்பு.

தகதின தோம்	—	$1\frac{1}{2}$	
தகதின தோம்	—	1. 1/2	4.1/2
தகதின தோம்	—	1. 1/2	
தகதின தோம்	—	$1\frac{1}{4}$	
தகதின தோம்	—	$1\frac{1}{4}$	$3\frac{3}{4}$
தகதின தோம்	—	$1\frac{1}{4}$	
தினதொம் — தா,		1.1/2	
தினதொம் — தா,		1.1/2	$3\frac{3}{4}$
தினதொம் —		3/4	(தா,)
			12

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நவரத்னா பிரிண்டர்ஸ்,
54, திருப்பரங்குன்றம் ரோடு,
பைக்காரா, மதுரை-625 017.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE